لا اله الا الله محمد رسول الله

# நபி வழி

உண்மை இஸ்லாத்தின் கொள்கை விளக்க இதழ்

அஹ்மதிய்யா

## கிலாஃபத் நூற்றாண்டு

## தமிழக மாநாடு சிறப்பு மலர்







நிருபர்களுக்கு பேட்டி அளிக்கும் காட்சி



மாநாட்டின் நுழைவாயில்



மாநாட்டில் தலைவர்கள் அமர்ந்திருக்கும் காட்சி




தமிழக வட மண்டல அமீர் அவர்களுக்கு இந்திய முதன்மை செயலர் அவர்கள் நினைவு பரிசு வழங்குகிறார்



R. ஷஃபீக் அஹ்மது 10 ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்றதற்காக பரிசு பெறும் காட்சி



மாநாட்டில் பார்வயாளர்களில் ஒரு பகுதி



மாநாட்டில் தொழுகை நடக்கும் காட்சி



மாநாட்டில் தொழுகை நடக்கும் காட்சி

# ஆணவம்

## திருக்குர்ஆனிலிருந்து...

''பூமியில் ஆணவம் கொண்டு நடக்காதீர். ஏனென்றால், இதனால் நாட்டின் எல்லையையும், உம்மால் அடைந்து விட முடியாது. (இவ்வாறு செய்வதனால் சமுதாயத்) தலைவர்களது உயர்ந்த அந்தஸ்தையும் உம்மால் பெற்று விட முடியாது.'' (17:38)

''நீ மக்களிடம் உன் கன்னத்தை கர்வத்தால் பொங்கச் செய்யாதே; பூமியில் ஆணவங் கொண்டு நடக்காதே. நிச்சயமாக கர்வங்கொண்டவன் பெருமையடிப்பவன் எவனையும் அல்லாஹ் நேசிப்பதில்லை.'' *(31:19)*

## நபிமொழியிலிருந்து...

ஹஸ்ரத் ஹாரிஸா பின் வஹப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூற நான் கேட்டேன். அவர்கள் கூறினார்கள்: ''நரக வாசிகளைப் பற்றி நான் உங்களுக்குத் தெரிவிக்கட்டுமா? (பிறகு தாமே கூறினார்கள்) : ஒவ்வொரு சிடு சிடு முகத்தையுடையவரும், பெருமையடிப்பவரும், ஆணவம் கொண்டவரும் ஆவார்.'' *(புகாரி, முஸ்லிம்)*

ஹஸ்ரத் அபூஸயீது குத்ரீ(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''சுவர்க்கமும், நரகமும் ஒன்றுடன் ஒன்று வாக்குவாதம் செய்து கொண்டன. அடக்குமுறையில் நடப்பவர்களும், ஆணவம் கொண்டோரும்தான் என்னிடத்தில் நுழைவார்கள் என நரகம் கூறியது. மக்களில் பலவீனமானவர்களும், வறியவர்களும்தான் என்னிடத்தில் நுழைவார்கள் என சுவர்க்கம் கூறியது. அப்போது அல்லாஹ், சுவர்க்கமே! நீ எனது கருணை ஆவாய். நான் விரும்புவருக்கு உன் மூலமாக நான் கருணை புரிகின்றேன். நரகமே! நீ எனது ஆக்கினை ஆவாய். நான் விரும்புவருக்கு உன் மூலமாக நான் தண்டனையை வழங்குகிறேன். மேலும் உங்கள் இருவரையும் நிரப்புவது என் ஆற்றலுக்குட்பட்டதாகும் என்று கூறினான்.''

## இமாம் மஹ்தி (அலை) அவர்களின் நூல்களிலிருந்து...

''ஆணவத்திலிருந்து விலகிக் கொள்ளுங்கள் என நான் என் ஜமாஅத்திற்கு அறிவுறுத்து கிறேன். ஏனென்றால், கண்ணியமிக்க நமது இறைவனின் பார்வையில் ஆணவம் வெறுக்கத் தக்கதாகும். ஆனால் ஆணவம் என்னவென்று நீங்கள் அறியாமல் இருக்கலாம். எனவே என்னிடமிருந்து தெரிந்து கொள்ளுங்கள். நான் இறைவனின் ஆவியால் பேசுகின்றேன்.

ஒருவன் தன் சகோதரனைவிட தான் அறிவாளி, புத்திசாலி, திறமைமிக்கவன் என எண்ணி அவனை தாழ்ந்தவனாக கருதினால், அது ஆணவமாகும். ஏனென்றால் அவன், இறைவனை அறிவு, ஞானம் ஆகியவற்றின் உறைவிடமாகக் கருதவில்லை. தன்னையே பெரியவனாக மதிக்கின்றான். அவனைப் பைத்தியமாக்கி விட்டு தாழ்ந்தவனாக எண்ணும் அவன்

**(தொடர்ச்சி 23 ஆம் பக்கம்)**

# உலக அமைதிக்கு இஸ்லாம் கூறும் போதனை

இறைவன் திருக்குர்ஆனில் எந்த அளவு நமக்கு, பிறருக்கு மரியாதை செலுத்தும் வழிமுறைகளையும் நல்லொழுக்கத்தையும் கற்றுத் தந்துள்ளான் என்றால் அது தொடர்பாக அவன் கூறுகின்றான்:

''நீங்கள் இணைவைப்பவர்களின் சிலைகளை ஏசாதீர்கள். அதனால் பிறகு அவர்கள் உமது இறைவனை ஏசுவார்கள். ஏனென்றால் அவர்கள் இந்த இறைவனைப் பற்றி அறியவில்லை.'' (6:109)

பாருங்கள்! இறைபோதனையின் அடிப்படையில் சிலை ஒன்றுமற்றதாக இருக்கின்றது. ஆனால் அவ்வாறிருந்தும் இறைவன் முஸ்லிம்களுக்கு, சிலைகளை ஏசுவதிலிருந்து உங்கள் நாவை மூடி வையுங்கள். மேலும் மென்மையுடன் மட்டுமே அவர்களுக்கு புரிய வைக்க வேண்டும் என்ற நல்லொழுக்கத்தை கற்றுத் தந்துள்ளான். அவ்வாறு ஏசுவதன் காரணமாக அவர்கள் கோபமடைந்து இறைவனை ஏசிவிடக் கூடாது; அதற்கு நீங்கள் காரணமாக ஆகிவிடக்கூடாது என இறைவன் நம்மிடம் கூறுகின்றான்.

எனவே, இதுதான் சமுதாயத்திலும் முழு உலகிலும் அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்டுவதற்கான இஸ்லாத்தின் கட்டளையாகும். ஒவ்வொரு அசுத்தத்திற்கும் அசுத்தத்தையே பதிலாகத் தருவது தன் மீதே அசுத்தத்தைப் போட்டுக் கொள்ளும் விஷயமாகும். எதிரி ஏதாவது கூறினால் அதற்கு பதில் கூறும் முகமாக நீங்கள் அவர் வணங்கும் சிலைகளை சுட்டிக்காட்டி பேசுவதாயிருந்தால் அவர் பதில் கூறும்போது இறைவனை ஏசலாம். இந்த அடிப்படையான உதாரணத்தை எடுத்துக் கூறி நீங்கள் பேசும் பேச்சிலும் ஞானம் நிலைத்திருக்கும் அம்சம் இருக்க வேண்டும் என்பதை இறைவன் முஸ்லிம்களுக்கு புரிய வைத்துள்ளான். அதற்காக கோழைத்தனத்தை காட்டவோ, எதிரிகளின் கூற்றுக்கு சாதகமாக ஆமாம் போட வேண்டிய தேவையோ நமக்கில்லை.

எனவே, அழகிய போதனைகளின் மூலம் மக்களை இறைவன் பக்கம் அழையுங்கள் என்ற கட்டளையை எப்போதும் கண்முன் நிறுத்தி செயல்பட வேண்டும். உங்களது தவறான நடவடிக்கையின் காரணமாக முஸ்லிம் அல்லாதவர் இறைவனை ஏசும் அளவில் செல்வதற்கு நீங்கள் காரணமாக ஆகிவிடக்கூடாது. ஒரு முஸ்லிமுக்கு இறைவன் மீதுள்ள தன்மான உணர்வு எல்லாவற்றையும் விட அதிகமாக இருக்கும்; இருக்கவும் வேண்டும். பிறகு அதனால் உங்களுக்கு துன்பம் ஏற்படும். தவறான சொற்களை பயன்படுத்திய காரணத்தால் இறைவனுக்கு ஏச்சுப்பேச்சுக்களை பெற்றுத் தந்ததற்கு நீங்கள் பொறுப்பாளியாக ஆகிவிடுவீர்கள்.

இவ்வாறே மாற்று மதப்பெரியார்களையும் தலைவர்களையும் நீங்கள் அவமரியாதையாகப் பேசினால் அவர்களும் இதே வழிமுறையில் முன்னேறிச் செல்வார்கள். இதனால்தான் நபிமொழியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியிருப்பதாக வந்திருக்கின்றது:

உங்களின் தந்தையர்களை ஏசாதீர்கள் என ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது ஒருவர், தாய் தந்தையரை யார்

ஏசுவார்கள்? என்று ஒருவர் கேட்டார். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீங்கள் எவரது தந்தையரையாவது அவமரியாதையாக பேசினால் அவர்களும் உமது தந்தையை அவமரியாதையாக பேசுவார்கள். இது நீங்கள் உங்கள் தந்தையை ஏசியது போன்றதாகிவிடும் என்று கூறினார்கள்.

இதுதான் அமைதியைப் பரப்புவதற்குரிய இஸ்லாமிய போதனையாகும். இறைவனுக்கு இணைவைத்தல் அவனுக்கு மிகவும் வெறுக்கத்தக்க செயலாகும். அதை நான் மன்னிக்கமாட்டேன் என்று இறைவன் கூறுகின்றான். அவ்வாறிருந்தும் இவ்வாறு இறைவனுக்கு இணைவைப்பவர்களிடம் கூட நல்லொழுக்கத்தின் வட்டத்திற்குள் இருந்து உரையாடுமாறு அல்லாஹ் கூறுகின்றான். உங்களது நல்லொழுக்கம், ஒரு முஸ்லிமின் உண்மையான உருவத்தை பிரதிபலிக்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்பதுதான் உங்களுக்கு இடப்பட்ட கட்டளையாகும். எனவே இந்த அழகிய போதனையை மக்களிடம் பரப்புவது இன்றைய முஸ்லிம்களின் தலையாய பணியாகும்.

இஸ்லாத்தை எள்ளி நகையாடுவதில் இருந்து விலகாமலிருப்பவர்களிடம் எவ்வாறு நடந்து கொள்வது? இது தொடர்பாக இறைவன் நமக்கு வழிகாட்டியுள்ளான். அப்படிப்பட்ட மக்களின் பாக்கியமற்ற நிலையானது அவர்களது செயலை அவர்களுக்கு அழகுபடுத்திக் காட்டியிருக்கின்றது. நாம் மிக நல்ல விஷயங்களை பேசுகின்றோம் என அவர்கள் நினைக்கிறார்கள். இறுதியில் இவ்வுல வாழ்க்கை முடிந்த பிறகு இவர்கள் இறைவன் பக்கம்தான் திரும்பி செல்ல வேண்டியுள்ளது. அவர்கள் இறைவன் பக்கம் செல்லும் போது இறைவன் அவர்கள் செய்ததைப் பற்றி அவர்களுக்கு தெரிவிப்பான். பிறகு அவன் அவர்களுடன் அவர்களுக்குரிய பரிமாற்றத்துடன் நடந்து கொள்வான். அது தொடர்பாக அல்லாஹ் கூறுகின்றான்:

‘‘(கண்காணிப்பவர்களே! சாட்சிகளாக இருப்பவர்களே! நீங்கள் இருவரும்) கடுமையாக நன்றிகேடு காட்டுபவர்களையும் உண்மையான கடும் எதிரியையும் நரகில் எறியுங்கள். ஒவ்வொரு நன்மையிலிருந்து தடுப்பவனையும், வரம்பு மீறுபவனையும் சந்தேகத்தில் ஆழ்த்துபவனையும் அல்லாஹ்வுடன் வேறு கடவுளை ஏற்படுத்திக் கொண்டவனையும் நீங்கள் இருவரும் கடும் தண்டனையில் எறியுங்கள்.’’ (50: 25-27)

எனவே, அல்லாஹ் கூறியிருப்பது போன்று மறுவுலகில் இவர்களுடன் இப்படித்தான் நடந்து கொள்வான். எனவே எந்தப் பணியைச் செய்வதை அல்லாஹ் தனது பொறுப்பில் எடுத்திருக்கின்றானோ அதைபற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை.

*(ஹஸ்ரத் ஐந்தாவது கலீ:பத்துல் மஸீஹ் அவர்கள் 22.6.2007 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையிலிருந்து.)*

தொகுப்பு: M. **மன்சூர் அஹ்மத்**

**Parveen Enterprises**
Dealers : Papers, Boards &
Binding Materials
Vadapalani, Chennai 600 026.

**M.Rafique & Sons**
Exporters And Agents
U55, 9th St, Anna Nagar, Chennai-40.
Ph : 2628 1531, Fax : 2628 1532

# கிலாஃபத்தின் முக்கியத்துவமும் அதன் அருள்களும்

**மவ்லானா முஹம்மது ஹமீது கவ்ஸர்**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு மதீனாவில் இருக்கும் பிரபல பள்ளிவாயிலான மஸ்ஜித் நபவியில் அனைத்து ஸஹாபாக்களும் ஒன்று கூடினர். அவ்வேளையில் அனைத்து ஸஹாபாக்களின் மத்தியில் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

எவர் முஹம்மது (ஸல்) அவர்களை வணங்கி வந்தாரோ அவர் முஹம்மது (ஸல்) அவர்கள் மரணித்து விட்டார்கள் என்பதை புரிந்து கொள்ளவும். எவர் அல்லாஹ்வை வணங்கி வந்தாரோ அவர், அல்லாஹ் எப்பொழுதும் உயிருடன் இருப்பான் என்பதை புரிந்து கொள்ளவும். முஹம்மது (ஸல்) அவர்கள் ஓர் இறை தூதர் மட்டுமே. அவர்களுக்கு முன்னுள்ள அனைத்து தூதர்களும் மரணித்து விட்டனர். *(சஹீஹ் புகாரி. பாடம் பதவுல் கல்க்)*

அனைத்து ஸஹாபாக்ககளும் இதில் ஒன்றுபட்டது மட்டுமல்லாமல் மற்றொரு விஷயத்திலும் ஒன்றுபட்டனர். அதாவது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கலீஃபாவாக, பிரதிநிதியாக ஒருவரை விரைவில் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றொரு விஷயத்தில் ஒன்றுபட்டவாறு ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களை முதல் கலீஃபாவாக தேர்ந்தெடுத்தனர். பிறகு அனைத்து ஸஹாபாமார்களும் புதியதாக அன்னாரின் கையில் பைஅத் செய்ய ஓடோடி வந்தார்கள். இவ்விடத்தில் இந்த கிலாஃபத் அல்லது கலீஃபாவின் கையில் புதியதாக பைஅத் செய்ய இவ்வளவு அவசரம் ஏன்? என்ற ஓர் கேள்வி எழலாம்.

இக்கேள்விக்கான பதில் என்னவென்றால் திருக்குர்ஆனின் விளக்கங்களின் நுணுக்கங் களையும் மற்றும் அதன் ஞானங்களையும் நபித்தோழர்கள் நன்கு அறிந்தவர்களாக இருந்தார்கள். அவர்களுக்கு முன் இறைவசனமாகிய அல்லாஹ்வின் கயிற்றைப் பற்றிப் பிடியுங்கள். சிதறிவிடாதீர்கள் என்பதே இருந்தது. இந்த வசனத்தில் வந்துள்ள ஹப்லுல்லாஹ் (அல்லாஹ்வின் கயிறு) என்பதற்கு பல விளக்கங்கள் இருந்தாலும் அதன் ஒரு பொருள் கலீஃபா அல்லது கிலாஃபத் என்பதுமாகும். நபித் தோழர்களில் பலர் நாம் அனைவரும் இந்த இறை கயிற்றை நன்றாகப் பற்றிப் பிடிக்கவில்லையென்றால், பிரிவினை எனும் மிகப் பெரிய அலை நம்மை மூழ்கடித்துவிடும் என்பதனை நன்றாக அறிந்திருந்தனர். அவர்கள் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இந்த ஹதீஸினையும் கேட்டுள்ளார்கள். அதாவது:

‘‘எவரொருவர் தனது கழுத்தில் பைஅத் இல்லாத நிலையில் மரணிக்கின்றாரோ அவருடைய மரணம், ஜாஹிலிய்யத்தான (அறியாமையின்) மரணமாக இருக்கின்றது. **(முஸ்லிம். கிதாபுல் இமாரா)**

இதனால் தான் அனைத்து ஸஹாபாக் களும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களின் கையில் புதியதாக பைஅத் செய்தார்கள். எவரும் நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கையில் பைஅத் செய்து விட்டேன்; இனி பைஅத் அவசியமில்லை என்று கூறியவாறு அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்களின் கையில் பைஅத் செய்வதை விட்டும் பின்வாங்கவில்லை. ஆனால் இன்றைய காலத்து அஹ்மதி அல்லாதவர்களோ, நாங்கள் முஸ்லிம்கள். எங்களுக்கு ஹஸ்ரத் இமாமுல் மஹ்தி (அலை) அல்லது அவர்களின் கலீஃபாவின் கையில் பைஅத்

செய்ய வேண்டிய அவசியமில்லை என்று கூறுகின்றார்கள். உண்மை என்னவென்றால் இவர்கள் தங்களின் உள்ளத்திற்கு பொய்யான திருப்தியை அளிக்கிறார்கள். அவ்வளவுதான்.

**இமாம் ஷஹ்ர் சதானி** அவர்கள் ஸஹாபாமார்களின் இந்த ஒருமித்த கருத்தைப் பற்றி இவ்வாறு கூறுகின்றார்கள்:

''ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு பூமி இல்லாமல் வெறுமையாக இருந்து விடும் என்றொரு எண்ணம் அபூபக்கர் (ரலி) அவர்களின் உள்ளத்திலோ மற்ற ஸஹாபாக்களின் உள்ளத்திலோ கற்பனையாகக் கூடத் தோன்றியிருக்க முடியாது. இமாமின் தோற்றம் அவசியமாக இருக்கின்றது; மேலும் இஸ்லாத்தில் கிலாஃபத்தான் இமாமத்துல் குப்ரா (மிகப் பெரும் தலைமை) ஆக இருக்கின்றது என்ற விஷயத்தில் அனைத்து ஸஹாபாக்களும் ஒன்றுபட்டவர்களாக இருந்தார்கள்.''

இதே போன்று **''அல் இமாமுல் மாலர்தி ஸாஹிபுல் அஹ்காமுஸ் ஸல்தானியா''** இவ்வாறு எழுதுகின்றார்கள்:

''இஸ்லாமிய ஜமாஅத்தில் இமாமத்தை நிலைநாட்டுவது அவசியமாகும். ஏனென்றால் இது நுபுவ்வத்தின் இடத்தில் இருக்கின்றது.''

**இப்னு தய்மிய்யா கூறுகின்றார்கள்:**

''கிலாஃபத்தை நிலைநாட்டுவது முஸ்லிம்களின் முக்கியமான ஒரு விஷயமாக இருக்கின்றது. இது மார்க்கத்தின் கடமையான விஷயங்களில் ஒன்றாக இருக்கின்றது. கிலாஃபத் அல்லாமல் மார்க்கம் நிலைபெற முடியாது.''

மாபெரும் முஸ்லிம் தத்துவமேதை **இப்னு கல்தூன்** (ஹிஜ்ரி 732 - 808) கிலாஃபத்தைப் பற்றி இவ்வாறு கூறுகின்றார்கள்:

''இந்த கிலாஃபத்துதான் ஷரீஅத்தையும், மார்க்கம் மற்றும் உலகத்தின் அரசாட்சியினையும் பாதுகாக்கின்றது. கலீஃபாவை நியமிப்பது அவசியமானதாகும். மேலும் இதுவே ஷரீஅத்தின்படியும் ஸஹாபாமார்கள் மற்றும் தாபியீனின் ஒருமித்த கருத்தின் படியும் அவசியமானதாக இருக்கின்றது.''

பிரபல ஸஹாபி ஹுதைஃபா (ரலி) அவர்களின் ஒரு நீண்ட அறிவிப்பு ஹதீஸ் புத்தகங்களில் இடம் பெற்றுள்ளது. அதன் சுருக்கம் என்னவென்றால் அவர்கள் கூறுகின்றார்கள். மக்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் நல்ல விஷயத்தைப் பற்றி கேட்பார்கள். நானோ தீய விஷயங்களைப் பற்றி கேட்பேன். அது என்னை அடைந்து விடுமோ என்ற ஒரு பயத்தில் (நான் கேட்பேன்) நான் நபி (ஸல்) அவர்களிடம் வினவினேன். யாரஸூலல்லாஹ்! நாம் அறிவற்ற காலகட்டத்தினுள் தீமையில் இருந்தோம் பிறகு அல்லாஹ் இந்த நன்மையினை கொண்டுவந்தான். இந்த நன்மைக்கு பிறகும் தீமை இருக்கின்றதா? (என்று கேட்டேன்) ஆம் இருக்கின்றது என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். பிறகு நான் வினவினேன். இத்தீமைக்கு பிறகு நன்மை இருக்கின்றதா என்று வினவினேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஆம் இருக்கின்றது. ஆனால் அதில் புகை இருக்கும். நான் புகை என்றால் என்ன? கேட்டேன். அதற்கு நபி (ஸல்) கூறினார்கள்: மக்கள் என் நடைமுறையை அல்லாமல் மற்ற நடைமுறையையும், என்னுடைய பழக்கங்கள் அல்லாமல் மற்ற பழக்கங்களையும் பின்பற்றுவார்கள்... (அதற்கு) நான் அக்காலத்தினை நான் அடைந்தேன் என்றால் எனக்கு என்ன கட்டளை? யா ரஸூலல்லாஹ் என்று வினவினேன். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

முஸ்லிம்களின் ஜமாஅத் மற்றும் அதன் இமாமுடன் தொடர்பு கொண்டவாறு இருக்க வேண்டும். அதற்கு நான் அவர்களின் ஜமாஅத் மற்றும் இமாம் இல்லையென்றால் (நான் என்ன செய்வது) என்று வினவினேன். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீ

ஏதாவதொரு மரத்தின் வேரினை சுவைத்து உயிர் வாழ்ந்து அதே நிலைமையில் மரணமடைந்தாலும் சரியே அனைத்து பிரிவினைகளையும் விட்டு விலகி இருக்க வேண்டும். *(மிஷ்காத், பாடம். அல்ஃபித்ன்)*

ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் தனது மரணத்திற்குப் பிறகு வரக்கூடிய கிலாஃபத் மற்றும் ஆட்சிகளின் காலத்தைப் பற்றி முன்னறிவித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் ரஸூலல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் ஹுதைஃபா (ரலி) அவர்கள் இவ்வாறு அறிவிக்கின்றார்கள்:

நபித்துவம் எவ்வளவு காலம் இருக்க வேண்டும் என அல்லாஹ் நாடியிருக்கின் றானோ அந்த அளவு நபித்துவம் இருக்கும். பிறகு அல்லாஹ் நாடும் போது உயர்த்த வேண்டிய தருணத்தில் அதை உயர்த்தி விடுவான். பிறகு நபித்துவத்தின் வழியில் கிலாஃபத் நிலைபெறும். அல்லாஹ் எந்த அளவு நாடியிருக்கின்றானோ அந்த அளவு அது நீடிக்கும். பிறகு அல்லாஹ் நாடும் போது உயர்த்த வேண்டிய தருணத்தில் அதை(யும்) உயர்த்தி விடுவான். பிறகு கடினமான மன்னராட்சி அமையும். அல்லாஹ் எந்த அளவு நாடியிருக்கின்றானோ அந்த அளவு நீடிக்கும். பிறகு அல்லாஹ் நாடும் போது உயர்த்த வேண்டிய தருணத்தில் அதை உயர்த்தி விடுவான். பின்னர் அடக்குமுறையைக் கொண்ட மன்னராட்சி அமையும். அல்லாஹ் எந்த அளவுக்கு நாடியிருக்கின்றானோ அந்த அளவுக்கு அது நீடிக்கும். பிறகு அல்லாஹ் நாடும் போது உயர்த்த வேண்டிய தருணத்தில் அதை உயர்த்தி விடுவான். பிறகு நபித்துவ வழியில் கிலாஃபத் அமையும். பிறகு நபி (ஸல்) அவர்கள் மவுனமாகி விட்டார்கள். *(மிஷ்காத். பாபு இன்ஸாரி வத்தஹ்ஸீர்)*

ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு நுபுவ்வத்தின் வழியிலான கிலாஃபத் நிலைபெற்றது. இதன் பிறகு உமவிய்யாவின் ஆட்சி காலம் துவங்கியது. இதன் பிறகு அப்பாஸியாவின் ஆட்சி காலம். அதன் பிறகு உஸ்மானிய்யாவின் ஆட்சி காலம். பிறகு ஹிஜ்ரி 1326 அதாவது கி.பி. 1908 ஆம் வருடம் ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்களின் மரணத்திற்குப் பிறகு நுபுவ்வத் வழியிலான கிலாஃபத் மீண்டும் நிலைபெற்றது. இது இறுதி நாள் வரை நீடிக்கும் இன்ஷா அல்லாஹ்.

குர்ஆனிலும் இறைவன் மிகத் தெளிவான முறையில் கிலாஃபத் சம்பந்தமாக இவ்வாறு கூறுகின்றான்: அல்லாஹ் நம்பிக்கைக் கொண்டு, நற்செயல் ஆற்றுபவர்களிடம் முன்னுள்ளவர்களை கலீஃபாவாக ஆக்கியது போன்று அவர்களையும் இப்பூமியில் கலீஃபாவாக ஆக்குவேன் என்று வாக்களித்துள்ளான். *(24 : 56)*

இந்த ஆயத்தின் அடிப்படையில் எவர்களிடம் ஈமானும், நற்செயல்களும் இல்லையோ அவர்களுக்கு எவ்வாறு கிலாஃபத் எனும் இறை அருள் கிடைக்க முடியும்? இறைவனுடைய இவ்வாக்கானது ஈமான் மற்றும் நற்செயல்களை நிபந்தனையாகக் கொண்டுள்ளது. ஈமானும், நற்செயல்களும் இல்லையென்றால் இவ்வாக்கும் முழுமை அடையாது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களின் குறைகளை கூறியிருக்கின்ற அதே சமயத்தில் இமாம் மஹ்தி மூலம் மார்க்கம் மீண்டும் உயிர்ப்பிக்கப்படும்; ஷரீஅத் மீண்டும் நிலைநிறுத்தப்படும். மேலும் அந்த இமாம் மஹ்தியின் மூலம் ஈமான், மற்றும் நற்செயல்களின் நிபந்தனையை முழுமை செய்யக் கூடிய ஒரு ஜமாஅத் நிலைபெறும். மேலும் அந்த ஜமாஅத் நுபுவ்வத் வழியிலான கிலாஃபத்திற்கு உரிமையுள்ளவர்களாக இருப்பார்கள் என்ற நற்செய்திகளையும்

வழங்கியுள்ளார்கள் என்பது மேற்கண்ட ஹதீஸிலிருந்து தெளிவாகிறது. இவ்வாறு இம்முன்னறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்களின் மூலம் மார்க்கத்தை உயிர்ப்பித்தல் மற்றும் ஷரீஅத்தை நிலை நாட்டுதல் எனும் பணிகள் துவங்கிவிட்டன. மேலும் இதன் தப்லீக் பணி தற்போது அல்லாஹ்வின் அருளால் நுபுவ்வத்தின் வழியிலான கிலாஃபத் மூலம் உலகத்தின் எல்லை வரை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இலட்சக்கணக்கான மக்கள் வேறுபட்ட மதங்களிலிருந்தும், பிரிவிலிருந்தும் இந்த ஜமாஅத்தில் இணைந்து கொண்டிருக் கின்றனர். (அல்ஹம்துலில்லாஹ்) மேலும் கிலாஃபத்தின் நிழலின் கீழ் இருந்தவாறு அல்லாஹ்விடமிருந்து ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களுக்கு இறங்கிய குர்ஆனின் மொழிபெயர்ப்பை பல்வேறு மொழிகளில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் வெளியிட்டுள்ளது.

ஆகவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் காத்தமுன்னபிய்யீன் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பின் படி ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்களின் வழியில் நிலைபெற்ற **கிலாஃபத் அலா மின்ஹாஜின் நுபுவ்வத்** அதாவது நுபுவ்வத்தின் வழியிலான கிலாஃபத்தை அறிந்து அதனை ஏற்று பற்றிப்பிடிப்பதிலேயே இன்றைய காலத்தில் முஸ்லிம்களின் முன்னேற்றம் இருக்கின்றது. மேலும் அனைத்து ஆன்மீக மற்றும் பௌதீக சம்பந்தப்பட்ட கருத்து வேறுபாடுகள் இறைவனால் நியமிக்கப்பட்ட ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்களின் மூலமாகத் தோன்றிய கிலாஃபத்துடன் தொடர்பு வைப்பதனாலயே நீங்க முடியும். அன்னாரைத்தான் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் நேர்மையை நிலைநாட்டுபவர், மற்றும் நீதியை நிலை நாட்டுபவர் என்று கூறியிருக்கின்றார்கள்.

முஸ்லிம்கள் இந்த மாபெரும் அருளை விட்டு விலகிச் சென்றதனால் பல இழப்புகளையும் தோல்விகளையும்தான் உலகில் சந்தித்து வருகின்றனர். இவர்கள் இந்த கிலாஃபத்தை விட்டு முகம் திருப்புவது நிச்சயமாக ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களுக்குக் கட்டுப்படா மையை தவிர வேறு அல்ல. முஸ்லிம்கள் ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களுக்கு கட்டுப்படாமல் இறுதி நாள் வரை தமக்கிடையேயுள்ள பிளவுகளிலிருந்து இரட்சிப்பு பெறவும் முடியாது; எதிரிகளை எதிர்த்து போரிட்டு தமது தோல்வியை வெற்றியாக மாற்றவும் முடியாது.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இரண்டாவது கலீஃபாவாகிய ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்கள் தனது ஒரு சொற்பொழிவில் முஸ்லிம்களை நோக்கி குறிப்பாக அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஒவ்வொரு சகோதரர்களையும் நோக்கி இவ்வாறு கூறினார்கள்:

‘‘எனது இறுதி அறிவுரை என்னவென்றால், அனைத்து அருள்களும் கிலாஃபத்தில் இருக்கின்றன. நுபுவ்வத் (நபித்துவம்) என்பது ஒரு விதையாக இருக்கின்றது. இதன் பிறகு அது கிலாஃபத்தின் தாக்கத்தை உலகத்தில் பரப்புகின்றது. நீங்கள் இந்த கிலாஃபத்தினை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். மேலும் இதன் அருள்களைக் கொண்டு உலகத்தினை பலன் பெறச் செய்யுங்கள்.’’ ***(அல்ஃபஸ்ல் 20 மே 1959)***

அல்லாஹ் முழு உலகத்திற்கும், முஸ்லிம்களுக்கும் திருக்குஆனின் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டல்களைப் புரிந்து அதன்படி செயல்படும் நல்வாய்ப்பை வழங்குவானாக. ஆமீன்.

**(தமிழில்: மவ்லவி R. மஹ்மூது அஹ்மத் அப்துல்லாஹ்)**

### சென்னையில் மிக வெற்றிகரமாக நடைபெற்ற

# கிலாஃபத் நூற்றாண்டு மாநாடு

**ரிப்போர்ட்: எம். நயீம் அஹ்மத்**

அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிய்யா கிலாஃபத் நூற்றாண்டு மாநாடு தமிழக அளவில் கடந்த ஜூன் மாதம் 21, 22 தேதிகளில் சென்னையில் மிக விமர்சையாகக் கொண்டாடப்பட்டது.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இந்த இரு நாள் மாநாட்டை சென்னையில் நடத்தவிடக்கூடாது என அதன் வளர்ச்சியைக் கண்டு பொறாமைக் கொண்ட அதன் எதிரிகள் தமிழக அளவில் திட்டங்கள் தீட்டி தடை செய்ய முற்பட்டனர். இறை இயக்கங்கள் இத்தகைய இன்னல்களுக்கு இலக்காக ஆவது தொன்று தொட்டு நடைபெறுகின்ற மார்க்க வரலாற்று உண்மையாகும்.

அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உலகினுக்கு அனுப்பி அறியாமையில் மூழ்கியிருந்த மக்களை மனிதப் புனிதர்களாக மாற்றிய பிறகு, ஒரு காலம் வரும். இந்த உம்மத்தை சார்ந்த மக்கள், யூதர்களைப் போன்றும் கிறித்தவர்களைப் போன்றும் ஆகிவிடுவார்கள். அப்போது இமாம் மஹ்தி தோன்றி அம்மக்களை மீண்டும் மனிதப் புனிதர்களாக மாற்றுவார்கள் என முன்னறிவித்தார்கள்.

மாநபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப தோன்றிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) தம்மை இமாம் மஹ்தி என அதற்குரிய சான்றுகளுடன் வாதித்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தை நிறுவினார்கள்.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் வாயிலாக இஸ்லாத்திற்கு பெரும் தொண்டாற்றிய இமாம் மஹ்தி (அலை) அவர்கள் தமது மரணத்திற்கு முன்னர் இறை முன்னறிவிப்பிற்கேற்ப தமக்கு பிறகு வெளிப்படவிருக்கின்ற இறைவனின் இரண்டாவது வல்லமையை (கிலாஃபத்தை)ப் பற்றி தமது ''அல் வஸிய்யத்'' உயில் என்ர நூலில் குறிப்பிட்டார்கள். அவர்களது மறைவிற்குப் பிறகு இறைவன் முன்னறிவித்த இரண்டாவது வல்லமையெனும் அஹ்மதிய்யா கிலாஃபத் (அஹ்மதி முஸ்லிம்களின் உலகளாவிய தலைமை) 1908 ஆம் ஆண்டு மே 27 ஆம் நாள் மலர்ந்தது. 2008-ம் ஆண்டுடன் இந்த கிலாஃபத்திற்கு 100 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன. மேலும் அஹ்மதிய்யா ஜமாஅத் தற்போது 190 நாடுகளில் பரவியுள்ளது.

அஹ்மதி முஸ்லிம்கள் ஒரு உலகளாவிய தலைமையின் கீழ் தம்மை வாழவைத்த இறைவனுக்கு நன்றி கூறும் ஒரு அம்சமாக இந்த கிலாஃபத் நூற்றாண்டு விழாவை உலகில் 190 நாடுகளிலும், குறிப்பாக இந்தியாவில் அனைத்து மாநிலங்களிலும் நடத்துகின்றனர். அதன் அடிப்படையிலேயே தமிழ்நாட்டிலும் இந்த மாநாடு சிறப்பாக நடைபெற்றது.

கடந்த ஜூன் 21ம் நாள், சென்னை தியாகராயா நகரில் உள்ள சர். பிட்டி. தியாகராய கலையரங்கின் வளாகத்தில் ''லிவாயே அஹ்மதிய்யத்'' எனும் அஹ்மதிய்யத்தின் வெற்றிக் கொடியை, அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் பாரத முதன்மைச்செயலர் மவ்லானா முஹம்மது இனாம் கவ்ரி அவர்கள் ஏற்றினார்கள்.

அதனைத் தொடர்து, அவர்கள் அங்கு வருகை தந்திருந்த பத்திரிக்கை யாளர்களுக்கு பேட்டியளித்தார்கள்.

அதன் பிறகு. காலை 11 மணியளவில் சர். பிட்டி. தியாகராய கலையரங்கில், **''கிலாஃபத் அமைப்பும் நமது பொறுப்புகளும்''** என்ற தலைப்பில் மாநாட்டின் முதல் நாள், முதல் அமர்வு துவங்கியது. தென் தமிழ்நாட்டில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் முதன் முதலில் நிறுவப்பட்ட சாத்தான்குளம் ஜமாஅத்தின் தற்போதைய தலைவர் ஜனாப் A.M.S. ஷரீப் அஹ்மத் அவர்கள் திருக்குர்ஆன் ஓதினார்கள். நாகர்கோவிலுள்ள கோட்டாறு ஜமாஅத்தின் பிரச்சாரகர் மவ்லவி M. ரபீக் அஹ்மத் உருது கவிதை பாடினார். தமிழக வட மண்டலம் மற்றும் புதுச்சேரி ஜமாஅத்தின் அமீர் (தலைவர்) ஜனாப் M.பஷாரத் அஹ்மது அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். மவ்லானா முஹம்மது இனாம் கவ்ரி அவர்கள் தலைமையுரை நிகழ்த்தி, துஆச் செய்து மாநாட்டை துவக்கி வைத்தார்கள்.

அதன் பிறகு, இஸ்லாமிய கிலாஃபத்தின் அமைப்பு, அதன் உண்மை, அதன் தேவை என்ற தலைப்பில் பாரத அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் **முஅல்லிம்களின் பொறுப்பாளர்** மவ்லானா முஹம்மது கரீமுத்தீன் ஸாஹிப் ஷாஹித் அவர்கள் உரையாற்றினார்கள். அதன் பிறகு சென்னை அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் சிறுமியர் அமைப்பான நாஸிராத்துல் அஹ்மதிய்யாவைச் சார்ந்த சிறுமியர் உருது கவிதை பாடினர். அதனைத் தொடர்ந்து, தமிழக அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தென்மண்டல அமீர் ஜனாப் A.P.Y. அப்துல் காதிர் அவர்கள் ''தமிழக அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாறு'' என்ற தலைப்பில் உரையாற்றினார்கள். இத்துடன் இந்த அமர்வு நிறைவுபெற்றது. லுஹர், அஸர் தொழுகைக்குப் பிறகு வருகை தந்த அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. பிற்பகல் 3 மணியளவில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு குறும்படமாக காட்டப்பட்டது.

அன்றைய தினம், 5 மணியளவில் **சமாதான மாநாடாக** இரண்டாவது அமர்வு துவங்கியது. **''மதங்கள் கூறும் மனித நேயம்''** என்ற தலைப்பில் சர்வ சமய கருத்தரங்கு நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் இந்திய முதன்மைச்செயலர் தலைமை வகித்தார்கள். ஜனாப் சித்தீக் அப்துல் காதிர் திருக்குர்ஆன் ஓதினார். மவ்லவி முஸ்ஸம்மில் அஹ்மத் உருது கவிதை பாடினார். அடுத்து ஜனாப் M. பஷாரத் அஹ்மது அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். ஹிந்து மதம் கூறும் மனித நேயம் என்ற தலைப்பில் சைவத் திருமதி இராஜேஸ்வரி விஸ்வநாதன் அவர்களும், புத்த மதம் கூறும் மனிதநேயம் என்ற தலைப்பில் ரெவரண்ட் திரு போதிதாமா அவர்களும், கிறித்தவ மதம் கூறும் மனிதநேயம் என்ற தலைப்பில் ரெவரண்ட் பாதர் K.V. சபாஸ்டியன் S.D.B. அவர்களும், சீக்கிய மதம் கூறும் மனிதநேயம் என்ற தலைப்பில் திரு கு. ஹர்பன்ஸ் சிங் ஆனந்த் அவர்களும், திராவிட சமயம் கூறும் மனிதநேயம் என்ற தலைப்பில் பேராசிரியர் டாக்டர். தெய்வநாயகம் அவர்களும், இஸ்லாம் கூறும் மனிதநேயம் என்ற தலைப்பில் பாரத அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் பயிற்சி மற்றும் சீர்திருத்த பொறுப்பாளர் மவ்லானா முஹம்மது உமர் சாஹிப் அவர்களும் உரையாற்றினார்கள்.

அதன் பின், தலைவரின் தலைமை யுரைக்குப் பிறகு வருகை தந்திருந்த மதப்பெரியார் அனைவருக்கும் பொன்னாடை போர்த்தப்பட்டு, நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. ஜனாப் A.P.Y. அப்துல் காதிர் அவர்கள் நன்றியுரை வழங்கினார்கள். துஆவுடன் கிலாஃபத் நூற்றாண்டு மாநாட்டின் முதல் நாள் நிகழ்ச்சிகள் நிறைவு பெற்றன. மஃரிப், இஷா தொழுகைக்குப் பிறகு இரவு உணவுடன் வருகை தந்த அனைவரும் மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினர்.

**கிலாஃபத் நூற்றாண்டு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள்:**

அஹ்மதிய்யா கிலாஃபத் நூற்றாண்டு மாநில மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள், சென்னை பிராட்வேயிலுள்ள இராஜா அண்ணாமலை மன்றத்தில் 22. 6. 08 அன்று காலை 11 மணியளவில் மிக விமர்சையாக நடைபெற்றது. மாநாட்டு வளாகம் பல வண்ணக் கொடிகளாலும், நல்லொழுக்கத்தை போதிக்கும் வாசகங்களை தாங்கிய பேனர்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

**''கிலாஃபத்தின் அருள்கள்''** என்ற தலைப்பில் துவங்கிய முதல் அமர்வில் ஜனாப் K. முஹம்மது அலி அவர்கள் திருக்குர்ஆன் ஓதினார்கள். மவ்லவி அபுல் ஹஸன் குழுவினர் உருது கவிதை பாடினர். பாரத அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் முதன்மைச் செயலர் மவ்லானா முஹம்மது இனாம் கவ்ரி சாஹிப் அவர்கள் தமது தலைமையுரையில் ''கிலாஃபத்தின் அருள்கள்'' என்ற தலைப்பில் உரையாற்றினார்கள்.

சென்னை அத்பாலுல் அஹ்மதிய்யா என்னும் சிறுவர் அமைப்பின் உறுப்பினர்களின் ஒரு குழு தமிழில் குலாம் அஹ்மத் கி ஜே! எனும் தலைப்பில் கவிதையை பாடினர். அதனைத் தொடர்ந்து ஜனாப் M. பஷாரத் அஹ்மத் அவர்கள் ''கிலாஃபத்தை எதிர்த்தவர்களின் முடிவு'' என்ற தலைப்பிலும், மவ்லவி முஸ்ஸம்மில் அஹ்மத் அவர்கள் ''கிலாஃபத் நிரந்தரமானது'' என்ற தலைப்பிலும், மவ்லவி K. தாரிக் அஹ்மத் கலீல் ''அஹ்மதிய்யா கலீஃபாக்களின் மூலமாக எதிரிகளுக்கு விடுக்கப்பட்ட சவால்கள்'' என்ற தலைப்பிலும், மவ்லானா முஹம்மது உமர் சாஹிப் அவர்கள் ''அஹ்மதிய்யா கிலாஃபத்தின் மூலமாக அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு 100 ஆண்டுகளில் கிடைத்த முன்னேற்றம் ஓர் பார்வை'' என்ற தலைப்பில் ளும் உரையாற்றினார்கள்.

இதனைத் தொடர்ந்து லுஹர், அஸர் தொழுகைக்குப் பிறகு மதிய உணவிற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிறகு பிற்பகல் 3 மணி முதல் ''புனித ரப்வா நகரம்'' எனும் குறும்படம் காட்டப்பட்டது.

அதன் பிறகு, **''கிலாஃபத் அல்லாஹ்வின் கேடயம்''** என்ற தலைப்பில் மாநாட்டின் நிறைவு அமர்வு துவங்கியது. ஜனாப் முனவ்வர் இப்ராஹீம் அவர்கள் திருக்குர்ஆன் ஓதினார். மவ்லவி M. ரஃபீக் அஹ்மத் அவர்கள் உருது கவிதை பாடினார். மவ்லவி முஹம்மது கரீமுத்தீன் சாஹிப் ஷாஹித் அவர்கள் கிலாஃபத்தே அஹ்மதிய்யா மற்றும் வஸிய்யத் அமைப்பு என்ற தலைப்பிலும், மவ்லவி K. மஹ்மூது அஹ்மத் அவர்கள், அஹ்மதிய்யா கலீஃபாக்களின் துஆக்கள் நிறைவேறியதற்கான பல்வேறு சம்பவங்கள் என்ற தலைப்பிலும் உரை நிகழ்த்தினார்கள்.

நிறைவு அமர்வின் நிறைவு சொற்பொழிவாக, தலைமை வகித்த

மவ்லானா முஹம்மது இனாம் கவுரி சாஹிப் அவர்கள் கிலாஃபத் அல்லாஹ்வின் கேடயம் என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்கள். இதன் பின்னர் நடந்து முடிந்த 10 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் முதல் மூன்று இடங்களை பிடித்த அஹ்மதி மாணவர்களுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டது. கிலாஃபத் நூற்றாண்டு உள்ளூர் விழாக்குழு தலைவர் M. நயீம் அஹ்மத் அவர்கள் நன்றியுரை வழங்கினார்கள். துஆவுடன் இரண்டு நாள் மாநாடு இனிதே நிறைவுபெற்றது.

இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜமாஅத்தின் முக்கிய பொறுப்பாளர்கள் இந்திய ஜமாஅத்துகளின் தலைமையகமான காதியானிலிருந்தும், தமிழகத்தின் பல்வேறு பகுதியிலுள்ள ஜமாஅத்துகளின் தலைவர் களும், முபல்லிக், முஅல்லிம் மார்களும், ஜமாஅத்தின் சகோதர சகோதரிகள் குடும்பத்துடன் திரளாக வருகைதந்து கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. நமது அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகா மற்றும் ஆந்திரா மாநிலத்திலிருந்தும் அஹ்மதி சகோதர சகோதரிகள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டில் கலந்து கொண்ட அனைவருக்கும் தங்கும் வசதி, உணவு ஆகியவற்றிற்கான ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. இந்த மாநாட்டின் ஆக்கப்பூர்வமான பணிகளுக்காக தமிழக அளவில் ஒரு மாநாட்டுக் குழுவும் சென்னையில் இம்மாநாடு நடைபெற்றதால் இம்மாநாட்டின் செயல்பாடுகளுக்காக கிலாஃபத் நூற்றாண்டு உள்ளூர் விழாக்குழுவும் ஏற்படுத்தப்பட்டு, திரம்பட செயலாற்றியது. சென்னை அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உட்கிளைகளான மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா எனும் அஹ்மதிய்யா இளைஞர் அணி, லஜ்னா இமாயில்லாஹ் எனும் மகளிர் அணி, மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் எனும் முதியோர் அணி மற்றும் சிறுவர், சிறுமியர் இம்மாநாட்டில் இரவு, பகலாக தமக்குக் கொடுக்கப்பட்ட பணிகளை திறம்பட செயல்படுத்தினார்கள். எல்லாம் வல்ல இறைவன் அவர்கள் அனைவருக்கும் நற்கூலி வழங்குவானாக.

இம்மாநாட்டில் கலந்து கொண்ட அனைவருக்கும், இம் மாநாடு வெற்றிகரமாக நடைபெற வேண்டும் என்ற ஆவலுடன் துஆச் செய்த நல்லுள்ளங்களுக்கும் இறைவன் தன் அருள்களை பன்மடங்கு பொழிவானாக ஆமீன்.

சென்னையில் நடைபெற்ற அஹ்மதிய்யா கிலாஃபத் நூற்றாண்டு

**மாநாட்டு குழு உறுப்பினர்கள்**

1. M. நயீம் அஹ்மது சாஹிப் தலைவர்
2. கெய்ஸர் முஹம்மது சாஹிப்
3. D. முஹம்மது அலி சாஹிப்
4. M. அப்துல் முனீம் சாஹிப்
5. K. நாஸிர் அஹ்மது சாஹிப்
6. T.J. முனவ்வர் இப்ராஹீம் சாஹிப்
7. H. முபாரக் அஹ்மது சாஹிப்
8. K.T.M. முஹம்மது பஷீர் சாஹிப்
9. S.M.A. ஜபருல்லாஹ் சாஹிப்
10. M. நூர் முஹம்மது சாஹிப்
11. N. அல்தாப் அஹ்மது சாஹிப்
12. ஸர்ஃபராஸ் அஹ்மது சாஹிப்

## கிலாஃபத் நூற்றாண்டு தமிழக மாநாட்டின் எதிரொலி

# பொறாமையினால் ஏற்பட்ட புழுக்கம்

புழுக்கம் என்பது வெயிலினால் மட்டுமன்று; பொறாமையினாலும் ஏற்படுவதுண்டு. இத்தகைய புழுக்கம் இப்போது முல்லாக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அஹ்மதிய்யா கிலாஃபத் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு தமிழக அஹ்மதிய்யா ஜமாஅத்துகள் அனைத்தும் இணைந்து ‘கிலாஃபத் மாநில மாநாட்டை’ சென்னையில் ஜூன்21 மற்றும் 22 ஆகிய இரு தினங்களில் மிகச் சிறப்பாக நடத்தியதையும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகா, ஆந்திரா ஆகியவற்றிலிருந்தும் பெருமளவில் அஹ்மதிகளும் பொதுமக்களும் கலந்து கொண்டதையும் கண்டு இந்த முல்லாக்களுக்கு புழுக்கம் தாளவில்லை.

அஹ்மதிய்யா கிலாஃபத் நூற்றாண்டை கடந்து வெற்றி நடை போடுவதை பொறுக்க முடியாத முல்லாக்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு எதிராகவும் அதன் தோற்றுநர் அவர்களுக்கு எதிராகவும் பொய்யான குற்றச்சாட்டுகளை கொண்ட ஒரு பிரசுரத்தை சென்னை மாநகர் எங்கும் வினியோகித் துள்ளனர். பொய் பேசுவதில் இந்த முல்லாக்கள் கை தேர்ந்தவர்கள் என்பதை இந்த பிரசுரம் நிரூபித்துள்ளது. இந்த பிரசுரத்தை ஷரீஅத் பாதுகாப்புப் பேரவை (?) வெளியிட்டுள்ளது.

ஷரீஅத் என்பது திருக்குர்ஆன், சுன்னத், ஹதீஸ் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும். ஆனால் இவர்கள் வெளியிட் டுள்ள இந்தப்பிரசுரத்தில் திருக்குர்ஆனோ, சுன்னத்தோ, ஹதீஸோ எதுவுமில்லை. இவர்களா ஷரீஅத்தின் பாதுகாவலர்கள்? இவர்கள் யார் ஷரீஅத்தை பாதுகாப்பதற்கு?

இந்த முல்லாக்கள் சென்னை மாநகரத்தில் உள்ள பல்வேறு பள்ளிவாசல்களில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கு எதிராக அவதூறுகளைக் கூறிவருகின்றனர். ஆனால் இவர்களின் இந்த பிரசுரமும், இவர்கள் கூறும் அவதூறுகளும் முஸ்லிம்கள் மத்தியில் எடுபடவில்லை. இந்த முல்லாக்கள் வெறும் சுயநலவாதிகள்; இவர்கள் பேச்சை நம்பக்கூடாது என்பதைப் பெரும்பாலான முஸ்லிம்கள் உணர்ந்தே இருக்கிறார்கள்.

இவர்கள் எம்மைப் பற்றி ‘ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களை அஹ்மதி முஸ்லிம்கள் ஏற்கமாட்டார்கள்’ என்று கூறியபோது, ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை அழகிய முறையில் அச்சிட்டு வெளியிட்டுள்ள அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தினரா அவர்களை ஏற்பதில்லை என்று கூறுகிறீர்கள்; இது முழுப் பொய் என்று அவர்களின் சபையிலேயே நியாய உணர்வு கொண்ட முஸ்லிம்களிடமிருந்து அவர்களுக்கு பதில் கிடைத்திருக்கிறது. இவ்வாறு முல்லாக்கள் தம் கைகளினாலேயே தமது முகத்தில் கரியை பூசிக் கொண்டனர்.

இந்த முல்லாக்களின் பொய் சரக்குகள் இனி முஸ்லிம்களின் மத்தியில் எடுபடாது. இவர்கள் வெளியிட்டுள்ள பிரசுரத்தின் வாயிலாக அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி இதுவரை அறியாதவர்கள் அதைப் பற்றி அறிய ஆர்வம் காட்டுவதை நம்மால் காண முடிகிறது.

பொய்யர்களின் முகத்திரை கிழியும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

**-அபுல் யும்னா**

# மாபெரும் இறைநேசர் ஹஸ்ரத் உதுமான் (ரலி)

ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் மறைவுக்குப் பின், ஹஸ்ரத் உதுமான் கனி இப்னு அஃப்பான் (ரலி) மூன்றாவது கலீஃபாவாகத் தேர்வு செய்யப்பட்டார்கள்.

மக்காவிலுள்ள பிரசித்திப் பெற்ற உமையா குடும்பத்தில் பிறந்த அவர்கள் இஸ்லாத்திற்கு வரும் முன்பாகவே தன்னடக்கமுள்ள, பெரும் செல்வந்தரான வணிகராக இருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மறைவுக்குப்பின் அவர்களைத் தொடர்ந்து ஹஸ்ரத் உதுமான் (ரலி) கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

ஹஸ்ரத் உதுமான் (ரலி) அவர்களின் முழுப் பெயர் உதுமான் பின் அஃப்பான் என்பதாகும். அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு நெருங்கிய உறவினராவார்கள். இவர்களுடைய தாய் வழிப் பாட்டி, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தந்தை வழிப் பாட்டனாராகிய அப்துல் முத்தலிப் அவர்களின் சொந்த சகோதரியாவார்கள். இந்த குடும்ப உறவுமுறை காரணமாக உதுமான் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும் தமது பெற்றோரின் உடன் பிறந்தவர்களின் பிள்ளைகளாக ஆகிவிட்டார்கள்.

ஹஸ்ரத் உதுமான் (ரலி) அவர்கள் சராசரி உயரம் உடையவராகவும், சிவந்த நிறத்துடனும், முழுமையான தாடியுடன், சுருண்ட தலைமுடியை கொண்டவராகவும், நீண்ட இரு கரங்களுடன், அழகிய பல் வரிசையைக் கொண்டவர்களாகவும் தோற்றம் அளித்தார்கள். அவர்களது வெளித்தோற்றத்தின் முக்கிய அம்சமாக அவர்களது அழகிய முகத்தைக் குறிப்பிடலாம்.

வெளித்தோற்றத்தில் அன்னார் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை ஒத்திருந்ததாக ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது மகளும் ஹஸ்ரத் உதுமான் (ரலி) அவர்களின் மனைவியுமாகிய உம்மு குல்சூமிடம் இவ்வாறு கூறினார்கள்:

''உமது கணவர் எல்லாரையும் விட உமது பாட்டனார் இப்ராஹீம் அவர்களையும், உமது தகப்பனார் முஹம்மது (ஸல்) அவர்களையும் ஒத்து காணப்படுகிறார்.'' (சுயூத்தி பக்கம்:161)

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ''உதுமான் எனது தோழர்களில் எல்லாரையும் விட அதிகமான எனது குண இயல்புகளைக் கொண்டவராக உள்ளார்.'' (சுயூத்தி பக்கம்:164)

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் உதுமான் (ரலி) அவர்களுக்கு உயரிய மதிப்பு இருந்தது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது இரு பெண்மக்களையும் அவர்களுக்கு மண முடித்துக் கொடுத்தார்கள். உதுமான் (ரலி) அவர்களின் முதல் திருமணம் ருகய்யா (ரலி) அவர்களுடன் நபி (ஸல்) அவர்களின் நபித்துவக் காலத்திற்கு முன்பே நடந்தது. பின்னர் ஹஸ்ரத் ருகய்யா (ரலி) பத்ர் போரின் போது மரணித்து விட்டார்கள். எல்லா நபிமார்களையும் விட மேன்மை பொருந்திய தூய நபி (ஸல்) அவர்களது மகளை மணமுடித்ததால் உதுமான் (ரலி) அவர்களுக்கு உயரிய கவுரவம் கிடைத்தது. இந்த கவுரவம் ஹஸ்ரத் ருகய்யா (ரலி) மரணமடைந்தபின் ஹஸ்ரத் நபி (ஸல்) தம் இரண்டாம் மகள் உம்மே குல்சூம் (ரலி) அவர்களை மண முடித்து கொடுத்த போது இரட்டிப்பானது.

உஹது போரின் போது ஹஸ்ரத் நபி (ஸல்) கூறினார்கள்: ''உதுமான் மணம் முடிக்கட்டும். எனக்கு மூன்றாவதாக ஒரு மகள் இருந்தாலும் கூட அவருக்கு மணமுடித்துக் கொடுத்திருப்

பேன். அல்லாஹ்விடமிருந்து இறையறிவிப்பை பெறாமல் நான் அவருக்கு மணமுடித்துக் கொடுக்கவில்லை.'' (சுயூத்தி பக்கம் 164)

இதன் மூலம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இறையறிவிப்பை பெற்ற பிறகே தமது மகள்களை ஹஸ்ரத் உதுமான் (ரலி) அவர்களுக்கு மணமுடித்துக் கொடுத்தார்கள் என்பது தெரிகிறது. இதன் காரணமாக ஹஸ்ரத் உதுமான் (ரலி) அவர்கள் 'துன் நூரைன்' (இரு ஒளியைக் கொண்டவர்) என அழைக்கப்பட்டார்கள்.

ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோரைப் போல ஹஸ்ரத் உதுமான் (ரலி) அவர்களும் வணிகராகவே விளங்கினார்கள். மக்கா நகரின் பெரும் செல்வந்தர்களில் முதன்மையானவராக இருந்தார்கள். எனினும் அதற்காக ஒரு போதும் தற்பெருமையோ, அகங்காரமோ கொண்டதில்லை. அதுமட்டுமல்ல, அந்த அறியாமை காலத்திலும், இஸ்லாமிய சட்டதிட்டங்கள் நடைமுறைக்கு வரும் முன்பாக ஒரு போதும் மது அருந்தியதில்லை. மக்காவின் வலிமைமிக்க உமையா குடும்பத்தைச் சார்ந்தவர்களாக இருந்ததால் ஹுதைபிய்யா உடன்படிக்கையின் போது முஸ்லிம்கள் நிலைமை சீர்பட பெரும் பங்காற்றினார்கள்.

**ஒரு முஸ்லிம் என்ற முறையில் அன்னாரின் ஆரம்ப வாழ்க்கை.**

அபூபக்கர் (ரலி), கதீஜா (ரலி), ஸைது (ரலி) ஆகியோரைத் தொடர்ந்து உதுமான் (ரலி) இஸ்லாத்தை தழுவிய நான்காவது நபராவார்கள். அப்போது அவர்களுக்கு 35 வயது. ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் மூலமாக மதம் மாறிய அன்னார் தமது செல்வச் செழிப்பிற்கு மாற்றமாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தோழர்களுக்கிடையே அதிக இரக்க குணம் கொண்டவர்களாக விளங்கினார்கள். இஸ்லாத்தில் இணைந்த நாட்கள் முதல் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் ஓர் அடிமையை விடுதலை செய்தார்கள்.

ஹஸ்ரத் உதுமான் (ரலி) அவர்கள் முஸ்லிமான பிறகு அவர்களின் மாமா அல்ஹகீம் இவர்களை பிடித்து கயிற்றால் இறுக்கக் கட்டி கடுமையாக அடித்து விட்டு, நீர் உம் தகப்பனாரின் மார்க்கத்தை விட்டுவிட்டு புதுமையான மார்க்கத்தை நாடுகின்றீரா? நீர் இந்த புதிய மார்க்கத்தை கைவிடும்வரை நான் உம்மை விடமாட்டேன் எனக் கூறினார். இதற்கு உதுமான் (ரலி) அவர்கள் ,'அல்லாஹ்வின் உதவியால், நான் இப்புதிய கொள்கையை விடப் போவதில்லை. அதனை மூடி மறைக்கவும் மாட்டேன்' எனக் கூறினார்கள். இத்தகைய உறுதியைக் கண்ட அல்ஹகீம் தமது முயற்சியை கைவிட்டுவிட்டார்.

முஸ்லிம்களுக்கு எதிராக அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்ட போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஆலோசனைகளுக்கேற்ப முஸ்லிம்கள் மேற்கு நோக்கி பயணம் மேற்கொண்டார்கள். ஹஸ்ரத் உதுமான் (ரலி) முதலில் அபீஸீனியாவுக்கும் பின்பு மதீனாவுக்கும் ஹிஜ்ரத் செய்தார்கள்.

இவ்வாறு முஸ்லிம்கள் செய்வதைக் கண்ட மக்கத்து காஃபிர்கள், மக்கா முழுவதும் முஸ்லிம்களாகி விட்டார்கள் என்ற ஒரு வதந்தியை பரவச் செய்தனர். இதனை உண்மை என நினைத்து பல முஸ்லிம்கள் மக்கா திரும்பினர். அவர்களுள் ஹஸ்ரத் உதுமான் (ரலி) அவர்களும் ஒருவராவார். அவர்களுக்கு தம் தகப்பனார் வழிவந்த நண்பர் வலீது பின் முகீரா என்பவரிடமிருந்து அடைக்கலம் கிடைத்தது. ஆனால் மற்ற முஸ்லிம்கள் பலவித கொடுமைகளுக்கும், இன்னல்களுக்கும் ஆளாகின்றபோது தாம் மட்டும் பாதுகாப்பில் இருப்பதை அன்னார் விரும்பவில்லை. எனவே அவர்கள் உடனே அப்பாதுகாப்பை விலக்கிக் கொண்டார்கள்.

**குண இயல்புகள்:** ஹஸ்ரத் உதுமான் (ரலி) அவர்களின் ஏழைகளுக்காக இறங்கும் இரக்க குணம், பொது நலன் கருதும் தன்மை, தேவையுடையவர்களுக்கு உதவி புரியும் மனப்பான்மை ஆகிய இவைதாம் நிச்சயமாக பின்பற்றி நடக்க உகந்தவையாகும்.

ஹஸ்ரத் உதுமான் (ரலி) அவர்கள் எப்படிப்பட்ட தாராள குணத்தையுடையவர்கள் என்றால், ஒரு முறை மதீனாவில் பஞ்சம் ஏற்பட்ட போது தாமே முன் சென்று ஏழைகளுக்கு உணவு பொருட்களை வழங்கினார்கள்.

மற்றொரு முறை மதீனத்து மக்கள் தண்ணீர் தட்டுப்பாட்டின் காரணமாக திண்டாடிய போது ஒரு யூதருக்கு சொந்தமான கிணற்றை அதிக விலை கொடுத்து வாங்கி (அப்போது 35000 திர்ஹம்) அதனை முஸ்லிம்கள் உபயோகிப் பதற்காகக் கொடுத்துவிட்டார்கள்.

**(History of Islam Page: 350)**

ஒரு தடவை அபூபக்கர் (ரலி) அவர்களின் கிலாஃபத்தின் போது பஞ்சம் ஏற்பட்டது. மக்கள் உணவுக்காக அலைந்தனர். அப்போது ஹஸ்ரத் உதுமான் (ரலி) அவர்கள் உணவுப் பொருட்களுடன் மதீனா வந்துள்ளதாக மக்கள் அறிந்து அவரிடம் ஓடி வந்தனர். குறைந்த விலைக்கு அதனை கொடுத்து விடும்படி கேட்டனர். அதற்கு உதுமான் (ரலி) அவர்கள், 'நான் என்னிடமுள்ள எல்லா உணவுப் பொருட்களையும் மதீனா வாழ் ஏழைகளுக்கும். தேவையுடையவர்களுக்கும் வழங்கியுள்ளேன் என்பதற்கு நீங்களே சாட்சியாவீர்கள்' எனக் கூறி வழங்கி விட்டார்கள்.

**(History of Islam Page: 424)**

ஹஸ்ரத் நபி (ஸல்) எப்போதெல்லாம் முஸ்லிம்களை அழைத்து உதவிக்காக கேட்டார்களோ, அப்போதெல்லாம் உதுமான் (ரலி) அளப்பரிய செல்வங்களை வழங்குவார்கள்.அப்துர்ரஹ்மான் இப்னு கப்பாப் அறிவிக்கிறார்கள்: ஒரு முறை நபி (ஸல்) ' கஷ்டத்திற்கு உள்ளான படைகளுக்கு உதவ முன்வாருங்கள் எனக் கூறிய போது, உதுமான் (ரலி) 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் 100 ஒட்டகங்களுக்கு அவற்றின் ஆசணம், ஆசண விரிப்பு ஆகியவற்றிற்கான செலவை இறைவனுக்காக பொறுப்பேற்றுக் கொள்கிறேன்' எனக் கூறினார்கள். நபி (ஸல்) மீண்டும் உதவி கோரிய போது 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் 200 ஒட்டகங்களுக்கு அவற்றின் ஆசணம், ஆசண விரிப்பு இவற்றின் செலவை இறைவனுக்காக பொறுப்பேற்கிறேன்' எனக் கூறினார்கள். தூய நபி (ஸல்) மீண்டும் உதவிக்காக கோரிய போது 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் 300 ஒட்டகங்களுக்கு அவற்றின் ஆசணம், ஆசண விரிப்பு முதலியவற்றின் செலவை இறைவனுக்காக பொறுப்பெடுத்துக் கொள்கிறேன்' எனக் கூறினார்கள். அப்போது ரஸூல் (ஸல்) மிம்பரிலிருந்து இறங்கி, இதன் பிறகு உதுமான் செய்கின்ற எவ்வித உதவிக்கும் நிகரான உதவி எதுவுமில்லை எனக் கூறினார்கள். *(சுயூத்தி பக்கம் :162)*

அவர்களின் இரக்க குணம் எப்படிப்பட்டது என்றால் அதன் காரணமாக அவர்களுக்கு 'கனி'(செல்வந்தர்) என்ற அடைமொழி வழங்கப்பட்டது. இவர்களிடம் காணப்பட்ட மற்றொரு சிறப்பான இயல்பு உன்னதமான தன்னடக்க குணமாகும்.

ஈமானில் குறையுடைய ஒருவர் இவர்களது செல்வ நிலையில் இருந்தால் அவர் பல நிலைகளிலும் இறுமாப்பு கொள்வார். ஆனால் உதுமான் (ரலி) ஒப்பற்ற தாழ்மை குணத்தையும் வெட்க உணர்வையும் வெளிப்படுத்தினார்கள்.

இதுபற்றி அல் ஹஸன் அறிவிக்கிறார்கள்: ''அன்னார் வீட்டின் நடுப் பாகத்தில் இருந்து கொண்டு கதவுகளை தாழிடப்பட்டிருந்தால் மட்டுமே தம் ஆடைகளை குளிப்பதற்காக

களைவார்கள். தம் வெட்க இயல்பு காரணமாக அவர்கள் முதுகெலும்பை உயர்த்தி நிமிர்ந்து நடந்ததே இல்லை.'' *(சுயூத்தி பக்கம் :1).*

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்ற போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உதுமான் (ரலி) அவர்களை காண்கின்ற போது, தம் உடைகளை போர்த்தியபடி 'வானவர்கள் கூட வெட்கப்படக்கூடிய அளவுக்கு நடந்து கொள்ளும் ஒரு மனிதரைக் கண்டு நான் வெட்கம் கொள்ள வேண்டாமா? எனக் கேட்டார்கள். *(சுயூத்தி பக்கம் :162)*

மற்றொரு நபி மொழியில், இப்னு உமர் (ரலி) அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) கூறினார்கள்: ''வானவர்கள் அல்லாஹ்விடமும் அவனது திருத்தூதரிடமும் வெட்கப்படுவது போல் உதுமான் (ரலி) அவர்களிடமும் வெட்கப்படுகின்றனர்.'' *(சுயூத்தி பக்கம் :164)*

உதுமான் (ரலி) நபி (ஸல்) அவர்கள் தோழர்கள் அதிக நெருக்கமுடைய வர்களாகவும், மதிப்பிற்குரியவர்களாகவும் கல்வி அறிவுமிக்கவர்களாகவும் விளங்கி னார்கள். திருக்குர்ஆன் முழுவதையும் மனனம் செய்தது மட்டுமல்லாமல் அல்லாஹ்வின் தூதரிடமிருந்து 146 ஹதீஸுகளைப் பெற்று அறிவிப்பு செய்துள்ளார்கள். இதுபற்றி அப்துர்ரஹ்மான் இப்னு காதிப் கூறுகையில் அல்லாஹ்வின் தூதருடைய சகாபா பெருமக்களுள் எவரும் உதுமான் (ரலி) போல இந்த அளவுக்கு முழுமையாகவும், விளக்கமாகவும், தெளிவாகவும் ஹதீஸ்களுக்கு விளக்கவுரை தரவில்லை எனக் குறிப்பிட்டார்கள்

ஹஜ்ஜின் போது உள்ள கடமைகளைப் பற்றி தெளிவான ஞானம் இருந்தது. நபி (ஸல்) அவர்கள் 10 நபித் தோழர்களுக்கு சுவர்க்கத்தில் நுழைவதற்கான உத்தரவாதத்தை வழங்கி னார்கள். அவர்களுள் அன்றைய தினம் உயிர் வாழ்ந்து கொண்டிருந்த உதுமான் (ரலி) அவர்களும் ஒருவராவார்.

நபி (ஸல்) போர்காலங்களில் உதுமான் (ரலி) அவர்களை தம் சார்பாக மதீனாவுக்கு பிரதிநிதியாக நியமித்துள்ளார்கள்.

**ஹுதைபியா உடன்படிக்கை:** பிப்ரவரி 628ல் நபி (ஸல்) மதீனாவிலிருந்து மக்காவுக்கு 1500 தோழர்களுடன் சென்றார்கள். இறைவனால் கஅபதுல்லாஹ்வுக்கு சென்று உம்ரா செய்யும்படி கட்டளை இடப்பட்டிருந்தது.

அங்கு ஹுதைபிய்யா என்னும் இடத்தில் முகாமிட்டார்கள். மக்கத்துவாசிகள் அனுமதி கொடுத்தால் அல்லாமல் நபி (ஸல்) கபாவை வலம் வர முடியாது. அதனால் மக்கத்து வாசிகளை அணுக தீர்மானிக்கப்பட்டது.

உதுமான் (ரலி) உடனே தமக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பை ஏற்றார்கள். அவர்களிடம் நபி (ஸல்) அவர்கள் குரைஷி தலைவர்களுக்கு எழுதிய கையெழுத்துப் பிரதி கொடுக்கப்பட்டது. அந்த கடிதத்தில் உம்ரா செல்வதற்கான காரணங்கள் விவரிக்கப் பட்டிருந்தன. உம்ரா முடிந்து, உரிய குர்பானிகள் நிறைவேற்றப்பட்டதும் முஸ்லிம்கள் அமைதியாக மதீனா திரும்புவதாகவும் கூறப்பட்டிருந்தது.

உதுமான் (ரலி) மக்காநகர் நுழைந்ததும், அவர்களின் பிரபலமான உறவினர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு தங்கள் பாதுகாப்பில் எடுத்துக் கொண்டனர்.

மேலும் மக்கத்து தலைவர்கள் 'உதுமானே! நீர் வேண்டுமானால் கஅபாவை வலம் வர அனுமதிக்கின்றோம். ஆனால் எவ்வகையிலும் முஸ்லிம்கள் மக்காவுக்கு வர இவ்வருடம் அனுமதி தர மாட்டோம் என்று கூறினர். உதுமான் (ரலி) தனக்கு வழங்கப்பட்ட சலுகையை நிராகரித்தார்கள். பின் எனது தலைவருடைய திட்டத்துடன்தான் நான் கஅபாவை வலம் வருவேன் என்றார்கள்.

குரைஷிகளுள் ஒரு பிரிவினர் இத்தருணத்தில் உதுமான் (ரலி) அவர்களை பிடித்து வைத்து கூடுதல் சலுகை பெற நாடினர். இதற்கிடையே உதுமான் (ரலி) முஸ்லிம்களிடம் திரும்பி வராததால் அன்னார் கொலை செய்யப்பட்டதாக வதந்தி பரவியது.

இதனை செவியேற்ற தூய நபி (ஸல்) தமது ஸஹாபாக்களை அழைத்து இவ்வாறு கூறினார்கள்: 'எல்லா நாடுகளிலும் ஒரு தூதரின் உயிர் புனிதமாகக் கருதப்படுகிறது. நான் உதுமான் (ரலி) கொல்லப்பட்டதாக கேள்விப் படுகிறேன். இது உண்மையெனில் எப்படிப்பட்ட விளைவுகள் வந்தாலும் மக்காவில் நுழைந்தே தீருவோம் எனக் கூறினார்கள்.

(Acacia) அகாசியா மரத்து நிழலில் நின்று, முஸ்லிகள் புடை சூழ நபி (ஸல்) நம்பிக்கையாளர்களிடம் தாம் உதுமான் விடுதலை செய்யப்படும்வரை உயிரைக் கொடுத்து போராடுவோம் என உறுதி மொழி வாங்கினார்கள்.

1500 நபிதோழர்கள் ஒருவர் பின் ஒருவராக தூய நபி (ஸல்) அவர்களது திருக்கரங்களில் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். இப்போது நபி (ஸல்) தம் வலக்கரத்தை இடக்கரத்தின் மீது வைத்து இது உதுமானுடைய கைகள். அவர் இங்கு இருந்திருந்தால் இந்த புனிதமான ஒப்பந்தத்தில் சிறிதும் பின்தங்கி இருக்கமாட்டார். ஆனால் அவர் தற்போது அல்லாஹ்வும் அவனது தூதரும் இட்ட கட்டளையை நிறைவேற்றச் சென்றுள்ளார் என்று கூறினார்கள்.

இந்த உறுதிமொழிதான் இஸ்லாத்தின் வரலாற்றில் ஹுதைபிய்யா உடன்படிக்கை என்ற பெயரில் முக்கிய இடத்தைப் பெறுகிறது.

இந்த உடன்படிக்கை நிகழ்ச்சி முற்று பெறுவதற்கு முன்பே உதுமான் (ரலி) முகாமுக்கு திரும்பினார்கள். முஸ்லிம்கள் உம்ராவை அடுத்த வருடம் வரை நிறைவேற்ற இயலாது என மக்கத்துவாசிகள் கூறிவிட்டதை அறிவித்தார்கள். முடிவில் ஹுதைபிய்யா உடன்படிக்கை கையெழுத்தாயிற்று.

**கிலாஃபத் :-** மூத்த நபித்தோழர்களைக் கொண்ட குழு மதீனாவில் கூடி ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நல்லடக்கத்திற்குப் பின் 3 நாட்கள் கழித்து ஹஸ்ரத் உதுமான் (ரலி) அவர்களை 3வது கலீஃபாவாக தேர்ந்தெடுத்தது.

கிலாஃபத் கமிட்டியின் ஆறு உறுப்பினர்களில் ஒருவரான அப்துர் ரஹ்மான் இப்னு அஃப் (ரலி) மற்ற கிலாஃபத் கமிட்டி உறுப்பினர்களை தனிமையில் சந்தித்து தகுதியுடைய கலீஃபாவை தேர்ந்தெடுக்கும்படி கேட்க முடிவு செய்தார்கள். இந்நிகழ்ச்சி முழுவதும் ரகசியமாக வைக்கப்பட்டது. உதுமானைத் (ரலி) தனிமையில் சந்தித்து 'நான் இப்போது பைஅத் உடன்படிக்கை பெறவில்லை எனில் நீங்கள் யாரிடம் பெறுமாறு சுட்டிக்காட்டுவீர்கள்?' எனக் கேட்டார்.

உதுமான் (ரலி) பதில் கூறினார்கள்;அலி' இதே கேள்வியை அலி (ரலி) அவர்களிடம் கேட்டதற்கு அலி (ரலி) பதில் கூறினார்கள். 'உதுமான்' என

கமிட்டியின் இன்னொரு உறுப்பினரான ஸுபைரிடம் இக்கேள்வியைக் கேட்கஅவர் 'அலி அல்லது உதுமான்' எனக் கூறினார்.

மற்றொரு உறுப்பினர் சஅதிடம் இக்கேள்வியை 'சஅதே'! நானோ நீங்களோ இந்தப் பதவியை விரும்பவில்லை. எனவே யார் பெயரைக் குறிப்பிடுவீர்கள் எனக் கேட்க 'உதுமான்' எனக் கூறினார்.

இவ்வகையில் அப்துர் ரஹ்மான் இப்னு அஃப் (ரலி) பல தரப்பட்ட மக்களிடமிருந்தும் கருத்துக்களைப் பெற்று, உதுமான் (ரலி) அவர்களுக்கு நிகராக இப்பதவிக்கு யாரும்

இல்லை என அறிவித்தார்கள். அவர் உதுமான் (ரலி) அவர்களின் கரங்களைப் பற்றியவாறு அல்லாஹ்வின், அவனது தூதரின், முந்தையை இரண்டு கலீஃபாக்களின் சுன்னத்தின்படி உதுமான் (ரலி) அவர்களை மூன்றாவது கலீஃபாவாக ஏற்று அவர்களிடம் நாங்கள் பைஅத் உடன்படிக்கை எடுக்கின்றோம் எனக் கூறினார்.

**சாதனைகள்:** உதுமான் (ரலி) 12 ஆண்டு காலம் கலீஃபாவாக இருந்தார்கள். முதல் 6 ஆண்டுகாலம் அமைதி, முன்னேற்றம் , எழுச்சியின் கால கட்டம். முஸ்லிம் படை பல பகுதிகளை வென்றது.

முஸ்லிம்களின் எண்ணிக்கை அதிகமாயிற்று. ஒற்றுமையிருந்தது. வெற்றிகளின் விளைவாக முஸ்லிம்களிடத்தில் நம்பிக்கை வலுப்பெற்றது. முஸ்லிம் படையின் மிகப்பெரும் வெற்றிகள், முதலில் அலெக்ஸான்டிரியாவையும், கெய்ரோவையும், சைப்ரஸ், லிபியா, ஆர்மேனியா மற்றும் ஈரானின் ஒருபெரும் பகுதியையும் கைப்பற்றி ஆப்கானிஸ்தானை தமது ஆட்சியில் கொண்டு வந்தது மட்டுமல்லாமல் இந்திய துணை கண்டத்தின் ‘‘சிந்து’’ மகாணம் இஸ்லாத்தின் கீழ் வந்தது.

அன்னாரின் மாபெரும் சாதனை யாதெனில் அவர்கள் புத்தக வடிவில் திருக்குர்ஆனை பாதுகாக்க முற்பட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களின் காலத்தில் தொகுக்கப்பட்ட அமைப்பிலேயே திருக்குஆன் நூல் வடிவில் 7 பிரதிகள் தயார் செய்யப்பட்டு உலகின் பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பப்பட்டது. உதுமான் (ரலி) அவர்களால் ஒன்றிணைக்கப்பட்ட திருமறையே இன்று பல கோடி முஸ்லிம்களால் கையாளப்படுகின்றது.

**அமைதியின்மை:** உதுமான் (ரலி) அவர்களின் இரண்டாவது 6 வருட ஆட்சியின் போது கலவரங்களும், குழப்பங்களும் தலை தூக்கின. கிலாஃபத்தின் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து, வதந்திகளை நம்பி உள்நாட்டில் அமைதியற்ற சூழல் உருவானது. புதிதாக இஸ்லாத்தில் இணைந்தவர்களிடம் போதிய சகிப்புத் தன்மை இல்லாததால், சரியான இஸ்லாத்தின் அறிவுரைகளைப் பேணி நடக்காததால் இப்படிப்பட்ட தவறான பிரச்சாரத்திற்கு அவர்களை சந்தர்ப்பவாதிகள் பயன்படுத்திக் கொண்டனர்.

கீழ்ப்படியாமையின் முதல் அறிகுறி ஹிஜ்ரிக்குப் பின் ஏறத்தாழ 25ம் ஆண்டில் துவங்கியது. அர்மேனியாவை கைப்பற்றிய பின் ஹஸ்ரத் உதுமான் (ரலி) சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்களை கூஃபாவின் கவர்னராக நியமித்தார்கள். பின் சஅத் இன்னலுக்கு உள்ளான போது அவரை அகற்றி விட்டு வலீத் பின் உக்பாவை நியமித்தார்கள். வலீத் உதுமான் (ரலி) அவர்களின் நெருங்கிய உறவினர். வலீத் மது அருந்தியதாக குற்றம் சுமத்தப்பட்டது. ஆனால் வலீதுடைய குற்றத்தை உறுதிபடுத்தக்கூடிய நேரடி சாட்சி இல்லாததால் கலீஃபாவால் எந்த தண்டனையும் கொடுக்க முடியவில்லை. இந்த தயக்கம் அவர்களின் பலவீனம் என கருதப்பட்டது. வேறு சிலர் கலீஃபா தம் உறவினர்களுக்கு சலுகை காட்டுகிறார் எனக் கருதினர்.

எகிப்திலும் இதுபோல் தம் உறவினர் ஒருவரை மேலான பதவிக்கு நியமித்ததால் அது முன்பு கூறியதை போல கிளர்ச்சிக்கு வித்திட்டது.

**அவசரக் கூட்டம்:** முஸ்லிம் உம்மத்தில் வளர்ந்து வரும் வேற்றுமையைக் களைய எல்லா ஆளுநர்களையும் மதீனாவில் கூடுமாறு கலீஃபா உத்தரவு பிறப்பித்தார்கள். சிரியாவிலிருந்து முஆவியா, எகிப்திலிருந்து அப்துல்லாஹ், கூஃபாவிலிருந்து சயீத், பஸ்ராவிலிருந்து அப்துல்லாஹ், மேலும் குறுநில ஆளுநர்களையும் அனுபவமிக்க

பெரியோர்களையும் அழைத்தார்கள்.

இரக்கமற்ற முறையில் இராணுவ அடக்குமுறை செய்வதற்காக வழங்கப்பட்ட ஆலோசனைகளை கலீஃபா ஏற்கவில்லை. முஆவியா கலீஃபாவின் இருப்பிடமும், தலைநகரமும் மதீனாவிலிருந்து டமாஸ்கஸ்க்கு மாற்றப்பட வேண்டும் என்றார். உதுமான் (ரலி) இதனை ஏற்கவில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இல்லத்தை விட்டு நான் பிரியமாட்டேன் எனக் கூறிவிட்டார்கள்.

அதே வேளையில் கலகக்காரர்கள் மதீனாவுக்கு தம் குற்றச்சாட்டுக்களை கொண்டு வந்தனர். அவர்கள் வந்த போது கலீஃபா இரு மூத்த சஹாாபிகளை அனுப்பி அவர்களின் குற்றச்சாட்டை விசாரிக்கும்படி கூறினார்கள்.

அவர்கள் இருவரும் கூறினர் கிளர்ச்சியாளர்களை எவ்வகையிலும் சாந்தப்படுத்த இயலாது. எதுவரை என்றால் கலீஃபா பதவியை துறக்க வேண்டும் அல்லது அவரை அவர்கள் கொலை செய்ய தயாராக உள்ளனர் என்றனர்.

கிளர்ச்சியாளர்கள் கலீஃபாவின் மீது ஆறு குற்றச்சாட்டுகளை எழுப்பினர். அவற்றிற்கு ஹஸ்ரத் உதுமான் (ரலி) அவர்கள் மிக அழகிய முறையில் தகுந்த காரணகாரியங்களுடன், எந்த ஒரு நேர்மையான மனிதனும் எவ்வித தப்பெண்ணமும் கொள்ளாத அளவில் தாம் நேர்மையான முஸ்லிம்களின் கலீஃபா என்பதை நிரூபிக்கும் வண்ணம் பதில் உரைத்தார்கள்.

**போலியான கடிதம் :-** கலகக்காரர்கள் மதீனா வந்த போது உதுமான் (ரலி) , அலி (ரலி) அவர்களை அவர்களோடு பேசுவதற்காக அனுப்பினார்கள். கலகக்காரர்கள் அவர்களிடம், ‘சில மேல் அதிகாரிகள் நீக்கப்பட வேண்டும்’ என கோரிக்கை வைத்தனர். உதுமான் (ரலி) எகிப்திய கவர்னரை மாற்றினார்கள். திருப்தி கொண்ட கிளர்ச்சியாளர்கள் மதீனாவை விட்டு புறப்பட்டுச் சென்றனர். சில நாட்களில் மீண்டும் திரும்பி வந்தனர். கலீஃபாவின் வீட்டை சுற்றி வளைத்தனர். கலீஃபா (ரலி) , உங்கள் வேண்டுகோள் ஏற்கப்பட்ட நிலையில் ஏன் மீண்டும் இங்கு வந்தீர்கள் எனக் கேட்டார்கள்.

அவர்கள் ஒரு அடிமையை பிடித்ததாகவும், அவர் கலீஃபாவால் அனுப்பப்பட்டதாகவும், அதில் அப்துல்லா பின் சஅதுக்கு இப்போது வந்து செல்லும் இந்த குழுவில் உள்ள அங்கத்தினர்கள் யாவரும் கொல்லப்பட வேண்டும் என அக்கடிதத்தில் எழுதியிருந்ததாகவும் அவர் கூறினார்.

மேலும் வழக்கு எப்படியும் ஆகட்டும் நாங்கள் கலீஃபாவை கொலை செய்யப் போகிறோம் எனக் கூறினர்.

**இஸ்லாமிய வரலாற்றின் மிக இருண்ட நாட்கள்.**

கலீஃபா முஸ்லிம்கள் வாழும் இடங்களுக்கெல்லாம் கடிதம் அனுப்பி உதவிக்காக அழைத்தார்கள். எகிப்து, சிரியா, கூஃபா, பஸ்ரா ஆகிய இடங்களிலிருந்து கூட்டம் கூட்டமாக வந்தனர். ஆனால் எவரும் குறித்த நேரத்தில் வந்து சேர முடியாததால் கலீஃபாவின் உயிரை காப்பாற்ற முடியவில்லை.

கலகக்காரர்கள் கலீஃபாவை பதவி துறக்குமாறு கூறினர். இதனைக் குறித்து ஹஸ்ரத் நபி (ஸல்) ஒரு முறை இவ்வாறு முன்னறிவித்தார்கள் :-

‘குழப்பம் (ஃபித்னா) உருவாகும். உதுமானை சுட்டிக்காட்டி தவறான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு இவர் கொல்லப்படுவார்.’

மற்றொரு சந்தர்ப்பத்தில் நபி (ஸல்) ‘‘உதுமானே! அல்லாஹ் உமக்கு நல்ல ஆடையை அணிவிப்பான். அதனால் இந்த கலகக்காரர்கள் இதனை களைய விரும்பினால்

நீர் என்னை சந்திக்கும் வரை அதனை அகற்றிவிட வேண்டாம் எனக் கூறினார்கள் .''

இதனால் கலீஃபா பதவியை துறக்கும்படி கூறப்பட்ட போது 'அல்லாஹ் எனக்கு அணிவித்த மேலான ஆடையை நானாக களையமாட்டேன்' எனக் கூறினார்கள்.

அப்போது கிளர்ச்சியாளர்கள் தன் தீய திட்டத்தை நிறைவேற்ற துணிந்தனர். அலி (ரலி) மக்கள் உட்புறம் பாதுகாப்பிற்காக இருக்கின்ற நிலையில் இந்த கலகக்காரர்கள் பின்புறமாக தாக்கி உள்ளே நுழைந்தனர்.

இதன் பிறகு நிகழ்ந்தவை இஸ்லாமிய வரலாற்றில் இருண்ட அத்தியாயம். மிகவும் துயரம் தரும் நிகழ்ச்சி.

அபூபக்கர் (ரலி) மகன், முஹம்மது பின் அபீபக்கர் கலீஃபாவின் தாடியை பிடித்தார். கலீஃபா கூறினார்கள். 'உமது தகப்பனார் இன்று உயிருடன் இருந்திருந்தால் உன் செயலைப் பற்றி என்ன நினைத்திருப்பார்கள் என்பதை எண்ணிப்பார்.'

உடனே அவர் பின் வாங்கினார். ஆனால் அவர் பின்னால் நின்ற வேறு இருவர் கலீஃபாவைத் தாக்கினர். உதுமான் (ரலி) அவர்களின் மனைவி நாயிலா இதனைத் தடுத்தார்கள். இதனால் அவர்களது மூன்று விரல்கள் ஷஹீதாக்கப்பட்டன. திருக்குர்ஆன் ஓதிக் கொண்டிருந்த கலீஃபாவின் உடலிலிருந்து இரத்தம் கொட்டியது. அது திருக்குர்ஆனின் பக்கங்களில் வீழ்ந்தது. அதே நேரத்தில் ஹஸ்ரத் உதுமான் (ரலி) அவர்கள் திருக்குர்ஆனின் (2 : 138) வசனங்களை ஓதிக் கொண்டிருந்தார்கள்.

''நீங்கள் இதில் நம்பிக்கை கொன்டிருப்பது போல் அவர்களும் நம்பிக்கை கொண்டவர்களாயின் அவர்கள் நேர்வழி பெற்றவர்களே. அவர்கள் புறக்கணித்து விட்டால் அவர்கள் கருத்து வேறுபாட்டிலேயே உறுதியாக உள்ளனர். அவர்களி(ன் தீங்கி)லிருந்து அல்லாஹ் உம்மை நிச்சயமாக காப்பாற்றுவான். அவன் நன்கு கேட்பவனும் நன்கு அறிபவனுமாவான்.''

இவ்வாறு கொடுமையான முறையில் ஹஸ்ரத் உதுமான் (ரலி) ஷஹீதாக்கப்பட்டார்கள்.

தூய நபி (ஸல்), அபூபக்கர் (ரலி), உமர் (ரலி) ஆகியோரின் கல்லறை அருகில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

நபி (ஸல்) அவர்கள் மூன்று முறை இவ்வாறு திரும்ப திரும்ப கூறியிருந்தார்கள்.

'அல்லாஹ்வே! நான் உதுமானிடம் திருப்தி அடைந்தது போல நீயும் அவரிடம்திருப்தி கொள்வாயாக.'

ஹஸ்ரத் உதுமான் (ரலி) ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது மதீனத்து பள்ளிவாசலை தம் சொந்த செலவில் விரிவுபடுத்தினார்கள். இவர்கள் காலத்தில் தொழுகைக்காக வரும்

## சேலத்தில் புதிய ஜமாஅத்

அல்லாஹ்வின் அருளால் சேலத்தில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் புதிதாக நிறுவப்பட்டுள்ளது. இதன் தலைவராக ஜனாப் நவாப் ஸிந்தா காஜா சாஹிப் அவர்களும், பொருளாளராக ஜனாப் ஷானில் ரஷீத் சாஹிப் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். தலைமையகம் இதற்கு ஒப்புதலும் வழங்கியுள்ளது.

சேலத்தில் ஜமாஅத்தின் வளர்ச்சிக்காக சகோதரர்கள் துஆ செய்யவும்.

**வடமண்டல அமீர்**
**தமிழ்நாடு**

மக்களின் எண்ணிக்கை மிக அதிகமாயிற்று. எந்த அளவுக்கு என்றால் அவர்களால் பாங்கின் சப்தத்தை கேட்க முடியவில்லை. அப்போது ஜுமுஆ தொழுகையில் 2 வது பாங்கு கொடுப்பதை நடைமுறைப்படுத்தினர்கள். பெருநாளில் தொழுகைக்குப் பிறகு குத்பா உரை நிகழ்த்தும் முறையையும் ஏற்படுத்தினார்கள்.

உண்மையில் இவர்களின் வாழ்க்கை அருள் நிறைந்ததாக இருந்தும் ,மிகவும் வேதனை தரக்கூடியதாக உள்ளது. அல்லாஹ்விடமிருந்து எப்படிப்பட்ட அருள்கள் எல்லாம் அவர்களுக்கு கிடைத்துள்ளன! எந்த அருட்கொடையின் வாசலும் அவர்களுக்கு மூடப்பட்டதில்லை.

பெரும் செல்வம் வழங்கப்பட்டது. அனைத்து அழகும் அவரிடம் இருந்தது. வலிமைமிக்க வம்சத்தை சார்ந்தவராக இருந்தார். மாநபி (ஸல்) அவர்களின் தனிப்பட்ட அன்பு அவரிடம் இருந்தது. மாநபியின் இரு மகள்கள் அவர்களுக்கு மணமுடித்துக் கொடுக்கப்பட்டது.

ஹஸ்ரத் உதுமான் (ரலி) அவர்கள் மிகவும் பணிவுமிக்க குணம் உடையவர். இறையச்சமிக்கவர், படித்தவர், பண்பாளி. ஆனால் அவர்கள் கலீஃபாவாக ஆன பிறகு அவர்களுக்கு கொடுக்கப்படாத துன்பங்கள் இல்லை. மக்கள் அவர்களிடம் நேரடியாக கேள்வி கேட்டார்கள். ஆனால் அவர்களது பதில்களை உதாசீனப்படுத்தினர். அவர்களது ஆணவம் உண்மையை ஏற்றுக் கொள்ள மறுத்தது. ஹஸ்ரத் உதுமான் (ரலி) அவர்களைப் பற்றிய பொய்க் குற்றச்சாட்டுகளை தமது அறியாமையின் காரணமாக மக்கள் நம்பினர். எனவே, முஸ்லிம்கள் பெரும் நஷ்டத்திற்குரியவர்களாக ஆக்கப்பட்டனர். இஸ்லாத்தின் ஒற்றுமை அதற்கு பின்னர் கேள்விக்குறியாக ஆகிவிட்டது. அதற்கேற்பட்ட அச்சுறுத்தல் ஈடு செய்யப்பட முடியாத ஒன்றாக ஆகிவிட்டது.

**(The Review of Religions எனும் பத்திரிகை 2007 டிசம்பர் இதழில் வெளிவந்த கட்டுரையை தழுவி எழுதப்பட்டது.)**

**தொகுப்பு : முஹம்மது அன்வர். தூத்துக்குடி.**

---

**3 ஆம் பக்க தொடர்ச்சி....**

சகோதரனுக்கு அவனை விடச் சிறந்த அறிவையும், ஞானத்தையும், திறமையையும் கொடுக்க இறைவனுக்கு வல்லமை இல்லையா? அவ்வாறே தன் செல்வம் செல்வாக்கு கௌரவத்தை கருத்தில் கொண்டு தன் சகோதரனை அற்பமாக மதித்தால் அவனும் ஆணவம் கொண்டவனே. ஏனென்றால் அவன் அப்பெயரையும் புகழையும் இறைவனே அவனுக்கு அளித்தான் என்பதை மறந்து விட்ட குருடனாவான். அவனை காலச் சுழற்சியால் ஒரு நொடியில் அடிமட்டத்தில் ஆழ்த்தி அவன் அற்பமாக மதித்த சகோதரனுக்கு அவனை விடச் சிறந்த செல்வமும், செல்வாக்கும் அளிக்க அந்த இறைவன் வல்லமைமிக்கவன் என்பதை அவன் உணர்வதில்லை. அவ்வாறே நல்ல உடற்கட்டும், கம்பீரமும், ஆற்றலும் உள்ள ஒருவன், தன் சகோதரனைக் கேலியும், கிண்டலும் செய்து இழிபெயர் சூட்டி அவனுடைய உடற்குறைகளைப் பிறரிடம் எடுத்துக் கூறினால் அவனும் ஆணவமுடையவன் ஆவான். ஆனால் ஒரு நொடியில் அவனுக்கு உடற்குறைகளை ஏற்படுத்தி அச்சகோதரனைவிடக் கீழ்த்தரமான நிலையில் ஆக்கக் கூடிய இறைவன் இருக்கிறான் என்பதை உணராததே அதற்கு காரணம்,'' *(ருஹானி காஸாயின் தொகுதி 18, பக்கம் 40)*

# சிறுவர் பகுதி

இஸ்லாம் முஸ்லிம்களின் மீது கடமையாக்கியுள்ள ஐந்தாவது கடமை 'ஹஜ்' எனும் மக்காவை நோக்கிய புனிதப் பயணமாகும். தலைமையகத்தோடு ஒரு ஈடுபாடு முஸ்லிம்களிடத்தில் தோன்ற வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும். முஸ்லிம்களில் யாருக்கெல்லாம் புனிதப் பயணத்தை மேற்கொள்கின்ற தகுதி, வசதி உள்ளதோ அவர்கள் ஒவ்வொரு நாட்டிலும் ஒன்று கூடி குறிப்பிட்ட நாட்களுக்காக மக்காவிற்கு செல்கின்றனர்.

இவ்வாறு உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து முஸ்லிகள் ஒரே இடத்தில் குறிப்பிட்ட நாட்களில் ஒன்று கூடுகின்ற வாய்ப்பு கிடைக்கிறது. இது முஸ்லிம்களி டையே சகோதரத்துவத்தை உறுதிப்படுத்து வதற்கும், உள்நாட்டு மற்றும் அண்டை நாடுகளின் உறவினை மேம்படுத்து வதற்கும் வழிகளை வகுக்கின்றது.

இவற்றிக்கெல்லாம் மேலாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன் தோன்றிய இறைதூதர்களான ஹஸ்ரத் இப்ரஹீம் (அலை), ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்களுடைய இறையன்பு மற்றும் அதனால் எழுந்த மாபெரும் தியாகம் நினைவு கூறப்படுவதுடன், தியாக உணர்வினை முஸ்லிம்களிடத்தில் மேம்படச் செய்வதற்கும் ஹஜ் புனிதப் பயணம் வழிவகுக்கின்றது.

தொழுகையைப் பற்றி நாம் படிக்கும் போது, அல்லாஹ் அவனை வணங்கு வதற்காக அவனது நல்லடியார்கள் மூலம் உருவாக்கிய முதல் ஆலயம் 'கஅபா' என்றும் அது அரேபியாவிலுள்ள மக்கா எனும் நகரத்தில் உள்ளது என்றும் படித்தோம்.

உலகில் கட்டப்பட்ட முதல் இறை ஆலயமான கஅபாவை ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்கள் தமது சந்ததிகள் ஒரே இறைவனை வணங்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக கட்டினார்கள். அது ஒரு கால கட்டத்தில் வெள்ளப் பெருக்கால் சிதைந்தது. பின்னர் ஹஸ்ரத் நூஹ் (அலை) அதனை அந்த இடத்தில் திரும்பவும் கட்டினார்கள். அன்றைய மக்களிடம் இறைவணக்கத்தில் கருத்துப் பிளவுகள் ஏற்பட்ட காலத்தில் பல்வேறு ஆலயங்கள் உருவாயின. மீண்டும் இந்த ஆலயம் சிதைந்து போனது. பின்னர் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களும், அவர்களது மகன் ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்களும் இந்த இறையாலயத்தை அதன் அடித்தளத் திலிருந்து உயர்த்தியதாகத் திருக்குர்ஆன் கூறுகிறது.

''இப்ராஹீமும், இஸ்மாயீலும் அந்த வீட்டின் அடித்தளத்தை உயர்த்திய நேரத்தையும் (எண்ணிப் பாருங்கள்). (அப்போது அவ்விருவரும்), எங்களுடைய இறைவா! எங்களிடமிருந்து (இப்பணியை) ஏற்றுக் கொள்வாயாக. நிச்சயமாக நீயே நன்கு கேட்கக் கூடியவனும், நன்கு அறியக்கூடிய வனுமாவாய் (என்று வேண்டினர்). *(திருக்குர்ஆன் 2 : 128)*

ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) புனித கஅபாவை திரும்பவும் கட்டிய பிறகு அவர்களது மகன் ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) மூலம் தோன்றிய அவர்களது சந்ததிகள் கஅபாவில் ஏக இறைவனை வணங்கி வந்தார்கள். காலங்கள் கடந்த பிறகு சிறிது சிறிதாக இறைவனை வணங்குவதை தவிர்த்து அந்த ஆலயம் சிலைகளால் நிரப்பப்பட்டது. எதுவரைஎன்றால் ஒரு காலகட்டத்தில் தினம் ஒரு சிலை என 360 சிலைகள் அங்கு வைக்கப்பட்டு வணங்கப்பட்டு வந்தது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோற்றத்திற்குப் பிறகு கஅபா இறைவனை மட்டும் வணங்குவதற்கான ஆலயமாக, உலகம் முழுவதும் உள்ள மக்களுக்காக உருவாக்கப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை, அல்லாஹ் உலகம்

முழுவதும் உள்ள முழு மனித சமுதாயத்திற்கும் உரிய நபியாக அனுப்பினான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன் தோன்றிய அனைத்து நபிமார்களும் ஒரு குறிப்பிட்ட கோத்திரங்களுக்கென தனித்தனியாக உலகின் பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பப்பட்ட தூதர்கள் ஆவர்.

ஹஸ்ரத் ஆதம் (அலை) முதல் தோன்றிய பல்வேறு நபிமார்களின் சமுதாயங்கள் அனைத்தையும் ஒன்று சேர்ப்பதற்காகவும், அவர்கள் அனைவரையும் ஒரே இறைவனை வணங்குவதற்காக உலகில் கட்டப்பட்ட முதல் இறையாலய மான கஅபாவில் ஒன்று கூட்டுவதற்காகவும் அல்லாஹ், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை தோன்றச் செய்தான்.

ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களும், ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்களும் கஅபாவை நிறுவியவாறு பல்வேறு துஆக்களை இறைவனிடம் வேண்டியதாக திருக்குர்ஆன் பதிவு செய்துள்ளது. அவற்றில் ஓரு வசனம் :

''எங்களுடைய இறைவா! அவர்களுக்கு உனது அடையாளங்களை எடுத்தோதி, அவர்களுக்கு வேதத்தையும், ஞானத்தை யும் கற்றுக் கொடுத்து, அவர்களை தூய்மைப்படுத்தும் ஒரு தூதரை அவர்களிலி ருந்தே அவர்களிடம் தோற்றுவிப்பாயாக. நிச்சயமாக நீயே வல்லோனும், ஞானமிக் கோனும் ஆவாய். (என்றும் நாங்கள் வேண்டிக் கொள்கிறோம்). *(திருக்குர்ஆன் 2 : 130)*

இவர்களின் இந்த பிரார்த்தனையை ஏற்றுக் கொண்ட இறைவன், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தோன்றச் செய்தான். இந்த துஆ, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோற்றத்திற்காக வேண்டி செய்யப்பட்ட துஆவாகும். இந்த துஆ, ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் இறைகட்டளைக்கேற்ப தனது துணைவியார் ஹாஜராவையும், மகன் இஸ்மாயீலையும் மக்காவின் பாலைவனத்தில் தன்னந்தனி யாக விட்டுவிட்டு வரும்போது தமது உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெளிப் படுத்திய துஆவாகும்.

மேலும், இந்த பிரார்த்தனையில் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் பல நபிமார்களை அனுப்புமாறு இறைவனை கேட்கவில்லை. மாறாக, ஒரு நபியை அதாவது, ஒரு மிகப் பெரும் நபியை, நபிமார்களுக் கெல்லாம் தந்தையாக, ஆசானாக விளங்கக் கூடிய ஒரு நபியை அனுப்புமாறு இந்தப் பிரார்த்தனையில் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் உள்ளடக்கியுள்ளார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றிய பிறகு இந்தப் பிரார்த்தனை தமக்காகச் செய்யப்பட்ட பிரார்த்தனை என்பதை அறிந்து இவ்வாறு கூறினார்கள்: ''அன தாவத் இப்ராஹீம்'', நான் இப்ராஹீமுடைய துஆவாக இருக்கிறேன். அகில உலகத்திற்கும் அருட்கொடை யாகத் தோன்றிய ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களின் வாயிலாக அல்லாஹ் திருக்குர்ஆனை இறக்கினான். அவர்களைப் பின்பற்றிய அந்த மக்களின் நேர்வழிக்காக, திருக்குர்ஆன் பல்வேறு கட்டளைகளைப் பிறப்பித்துள்ளது. அவற்றில் ஒன்று, அல்லாஹுவுக்காக நீங்கள் ஹஜ்ஜை நிறைவேற்றுங்கள் என்பதாகும்.

ஹஜ்ஜை எவ்வாறு நிறைவேற்றுவது? ஹஜ்ஜின் போது என்னென்ன செய்ய வேண்டும்? எவ்வாறு கடமைகளை நிறைவேற்ற வேண்டும்? என்பதை அடுத்த இதழில் பார்ப்போம். இன்ஷா அல்லாஹ்.

(தொடரும்)

**M. நயீம் அஹ்மத்**

அட்டையில்...

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் இந்திய முதன்மை செயலர் மவ்லவி முஹம்மது இனாம் கோரி சாஹிப் அவர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கொடியை ஏற்றும் காட்சி.

# நாற்பது நபி மொழிகள்

(தொடர் : 6)

**ஹதீஸ் எண் 26 : அல் அய்னு ஹக்குன்**

**பொருள்** : கண் படுதல் என்பது உண்மைதான்.

**விளக்கம்** : கண்படுதல் என்பது மெஸ்மெரிஸம் என்பதன் ஒரு கிளைதான். எனவே அதை நாம் மறுக்க முடியாது. இந்த தலைப்பு மிக நீண்டதாகும். எனவே இங்கு அதைப் பற்றி விவாதிக்க இயலாது.

**ஹதீஸ் எண் 27 : அஸ்ஸப்ரு ரிழன்**

**பொருள் :** பொறுமை என்பது இறை நியதியின் மீது திருப்தி கொள்வதற்குப் பெயராகும்.

**விளக்கம்** : எதுவும் செய்ய முடியாத போது நாம் பொறுமை செய்கிறோம் என நாவால் கூறி விட்டு, உள்ளத்தால் இறை நியதியின் மீது கோபம் கொண்டிருப்பதற்குப் பெயர் பொறுமை அன்று.

**ஹதீஸ் எண் 28 : அல் முஹ்தகிரு மல்வூனுன்**

**பொருள்** : விலை அதிகமான பிறகு விற்பதற்காக தானியங்களை தடுத்து வைத்துக் கொள்பவன் சாபத்திற்குரியவனாவான்.

**விளக்கம்** : அப்படிப்பட்டவர் எல்லா மார்க்கங்களின் பார்வையிலும், சமுதாயங்களின் பார்வையிலும் உண்மையில் சாபத்திற்குரியவர்தான். அவருடைய எண்ணமே தீயதாகும். அதாவது மக்கள் பட்டினியினால் மரணித்துக் கொண்டிருக்கும் போது அவர்கள் மூலமாக நன்றாக சம்பாதிக்க வேண்டும் என எண்ணுகிறார்.

**ஹதீஸ் எண் 29 : அல் முஸ்லிமு அஹுல் முஸ்லிம்**

**பொருள்** : ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமின் சகோதரர் ஆவார்.

**விளக்கம்** : எனவே முஸ்லிம்கள் ஒருவருக்கொருவர் சகோதர உணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும். நிச்சயமாக நம்பிக்கை கொண்டவர்கள் சகோதரர்களாவர் என திருக்குர்ஆனும் கூறுகிறது. (49 :11)

**ஹதீஸ் எண் 30 : அல் மத்துவூனு ஷஹீதுன்**

**பொருள்** : பிளேக் நோயினால் மரணிப்பவர் ஷஹீது ஆவார்.

**விளக்கம்** : அதாவது முஸ்லிம் ஒருவர் பிளேக் நோயினால் மரணித்தால் அவரது மரணம் ஷஹாதத்தின் மரணமாகும். ஏனெனில் பிளேக் நோயின் துன்பத்தினால், அது அவருடைய பாவங்களுக்கு பரிகாரமாகிறது.

**National Watch Company**
Opposite to Bus Stand
Somanur, Tiruppur

**Chennai Hardwares**
241, Aroct Road, Chennai 600 026.
Ph : 2473 5373



இந்து மத பேச்சாளர்
ராஜேஸ்வரி விஸ்வநாதன்



கிறித்தவ மத பேச்சாளர்
R.V. செபஸ்டியன்



புத்த மத பேச்சாளர்



சீக்கிய மத பேச்சாளர்
ஹர்பந்த் சிங் ஆனந்த்



திராவிட சமய பேச்சாளர்
டாக்டர் தெய்வநாயகம்



இஸ்லாம் மார்க்க பேச்சாளர்
மவ்லவி முஹம்மது உமர்



மவ்லவி கரீமுத்தீன்
ஷாஹிது சாஹிப்



தென் மண்டல அமீர்
A.P.Y அப்துல் காதிர்



M. நயீம் அஹ்மது



மவ்லவி O.M. முஸ்ஸம்மில்
அஹ்மது



மவ்லவி மஹ்மூது
அஹ்மது



மவ்லவி K. தாரிக்
அஹ்மது



மாநாட்டில் சிறுவர்கள் பாடும் காட்சி



மாநாட்டில் சிறுமிகள் பாடும் காட்சி

**NABI VAZHI Tamil Monthly** Registered with the Registrar of News Paper of India at No.TN/TAM/05/15211



நிருபர்களுக்கு பேட்டி அளிக்கும் காட்சி




மாநாட்டு மேடையின் காட்சி




மாநாட்டில் இந்திய முதன்மை செயலர்
உரையாற்றும் காட்சி




மாநாட்டில் தமிழக வட மண்டல அமீர்
உரையாற்றும் காட்சி




மாநாட்டில் கலந்து கொண்ட
முக்கிய பிரமுகர்கள்




சர்வ சமய மாநாட்டில் கலந்து கொண்ட
பல்வேறு மத அறிஞர்கள்

Printed & Published By : **K. NASIR AHMED.** From: No.11, First Main Road, U.I. Colony, Kodambakkam, Chennai-24. Ph : 2481 7174.
Editor : **O.M. Muzzammil Ahmed**. Printed at : Script Printers, Periyar Pathai Choolaimedu, Chennai - 600094.